MALAE THEEPORI

# மாலை தீப்பொறி

2021 டிசம்பர் 1-15 தொகுதி 20 இதழ் 9

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.150

## அரக்கத்தனமான மோடி ஆட்சியை அடிபணிய வைத்த இந்திய விவசாயிகள்



## காக்கிச் சட்டையும் சிவப்புத் துண்டும்

# தமிழ்நாட்டில், 700 ஆயுள் தண்டனைக் கைதிகள் விடுதலை:
# இஸ்லாமியரும் எழுவரும் இடம்பெற வேண்டும்!
# சிபிஐஎம்எல் வேண்டுகோள் !

*"அண்ணா பிறந்த நாளையொட்டி, வருகிற 2022ம் ஆண்டு செப்டம்பர் 15ம் தேதி தமிழக சிறைகளில் நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்து வரும் ஆயுள் தண்டனைக் கைதிகள் 700 பேர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அரசின் அறிவிப்பு வரவேற்புக்குரியது. ஆனால், நீண்ட காலமாக சிறைக்கொடுமையை அனுபவித்து வரும் இஸ்லாமியர்களும் எழுவரும் அதில் இல்லை என்பது ஏமாற்றமளிக்கிறது.*

*700 பேர் விடுதலைக்கான அரசாணை 488யைத் தமிழ்நாடு அரசு 2021 நவம்பர் 15ல், வெளியிட்டுள்ளது. 10 ஆண்டுகளை சிறையில் கழித்த ஆயுள் தண்டனை சிறைவாசிகளை நன்னடத்தை அடிப்படையில் பரிசீலனை செய்து விடுதலை செய்வது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், 38 இஸ்லாமியர் ஆயுள் தண்டனை சிறைவாசிகள், சராசரியாக 23 முதல் 26 ஆண்டுகளாக கோவை, சென்னை புழல், பாளையங்கோட்டை சிறைகளில் துன்புற்று வருகின்றனர்; இவர்கள் இந்த பட்டியலில் இல்லை. இது அதிர்ச்சியூட்டும் ஆச்சரியமாக இருக்கிறது. இது அரசியலமைப்புச் சட்டத்திற்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கும், இந்திய நீதிபரிபாலன நெறிகளுக்கும் இயற்கைநீதி கோட்பாடுகளுக்கும் எதிரானதாகும்.*

*அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 161, ஆளுநர் அதிகாரங்கள் (மாநில அரசுக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள்) என்பதன் வழியாக, கருணை அடிப்படையில் ஆயுள் தண்டனைக் கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்ய வாய்ப்பளிக்கிறது. அதேபோல், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் 433ஏ மரண தண்டனை, ஆயுள் தண்டனை பெற்றவர்கள் 14 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்திருந்தால், அவர்களை, தண்டனை குறைப்பு செய்து, விடுதலை செய்ய வழிவகுக்கிறது. சிறைத் தண்டனையின் நோக்கம், சிறையிலேயே சாகும்வரை குற்றவாளிகளை தண்டிப்பது அல்ல; சமூகத்துடன் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்காக திருத்தி மாற்றியமைப்பது தான். இதற்காகவே அரசுக்கு இந்த சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.*

**அரசாணை 488 இசுலாமிய சிறைவாசிகள் விடுதலைக்கு வழி வகுக்கவில்லை!**

*கடந்த அதிமுக எடப்பாடி பழனிசாமி அரசாங்கம் தயாரித்த அதே அரசாணையைத்தான், தற்போதைய திமுக அரசாங்கமும் வெளியிட்டுள்ளது. இந்த அரசாணை 17 வகையான குற்றங்களை பட்டியலிட்டு, அது தொடர்பானவர்களுக்கு விடுதலை இல்லை என்கிறது. உதாரணமாக "வனச் சட்டம் மீறியவர்கள், பாலியல் பலாத்காரம் செய்தவர்கள், அரசுக்கு எதிராக செயல்பட்டவர்கள், தப்பிக்க முயன்றவர்கள், சாதி,மத மோதல்களில் ஈடுபட்டவர்கள் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்டவர்கள் விடுதலை செய்யப்பட மாட்டார்கள்" என்கிறது. இந்த விதிமுறை சமூகநீதியை புறக்கணித்த பாரபட்சமான அணுகுமுறை. இந்த அணுகுமுறைதான் இசுலாமிய சிறைவாசிகள் விடுதலை பெறுவதை தடுக்கிறது. 26 ஆண்டு சிறைக்கொடுமையில் வாழ்ந்தவர்களை இன்னும் குற்றவாளிகளாகவே கருதுவது தவறானது.*

*முந்தைய அதிமுக ஆட்சியின் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, அவர் கொண்டு வந்த அரசாணைக்கு விரோதமாக, தருமபுரியில் பஸ்களை எரித்து 3 வேளாண் கல்லூரி மாணவிகளைக் கொன்ற 3 அதிமுக பிரமுகர்களை 12 ஆண்டுகளே கழிந்த நிலையில், 2018ல் முன்கூட்டியே விடுதலை செய்தார்.*

*அதேபோல, உள்ளாட்சி தேர்தலில் நின்றதற்காக மதுரை மேலவளவில் 6 தலித்துகளை வெட்டிக் கொன்ற, ஆயுள் தண்டனை பெற்ற 12 சாதியாதிக்க பேர்வழிகளை ஆயுள் தண்டனை முடிவதற்கு முன்பாகவே 2019 ல், எடப்பாடி பழனிசாமி அரசாங்கம் விடுதலை செய்தது. இந்த இரண்டு வழக்குகளிலும் அரசியல் சட்டப்பிரிவு 161 அய் அதிமுக அரசு பயன்படுத்திக் கொண்டது.*

– தொடர்ச்சி 23ம் பக்கம்

2021 டிசம்பர் 1-15

மாலெ தீப்பொறி

தொகுதி 20 இதழ் 9

இருவார இதழ்

## உள்ளே

ஜெய் பீமைச் சுற்றி 4
காக்கிச் சட்டையும் சிவப்புத் துண்டும் 7
இளைஞர் -மாணவர் இயக்கத் திசைவழி 10
விவசாயிகள் பிரச்சனை-அனுபவம் 15
ஏமாற்றத்தில் முடிந்த சிஓபி 26 20

**ஆசிரியர்**
**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**
**பாலசுந்தரம்**
**என்.கே.நடராஜன்**
**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**
**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி : 94435 07067
94868 59598

malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

## மதவெறி பாசிஸ்டுகள் மாறிவிட மாட்டார்கள்

**வீ**ரம் செறிந்த விவசாயிகளின் போராட்டத்தின் முன்பு விவசாயச் சட்டங்களை ரத்து செய்வோம் என்று பின் வாங்கிய மோடி அரசு, அந்தச் சட்டங்களை இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை நிராகரித்து விட்டு எவ்வித விவாதமும் இன்றி, மூன்று விவசாயச் சட்டங்களையும், எப்படி தான்தோன்றித்தனமாக சட்டமாக்கியதோ அதே வழியில் இப்போது ரத்து செய்வதற்கான மசோதாவையும் விவாதம் இன்றி நிறைவேற்றியுள்ளது மோடி அரசு. விவாதம் நடத்தினால் வீரமிக்க விவசாயிகளின் இன்னும் நிறைவேற்றப்பட வேண்டிய நியாயமான கோரிக்கைகள் பற்றி நாட்டு மக்கள் தெளிவாக அறிந்திட வழி வகுக்கும் என்பதால், இன்னொருபுறம் இவர்களுடைய குட்டு வெளிப்பட்டுவிடும் என்பதால் எதையும் விவாதம் இல்லாமலேயே முடித்து விட முனைகிறது மோடி அரசு. விவசாயச் சட்ட மசோதாவின் நோக்க ஆவணத்தில் தவறானவற்றை தனக்குச் சாதகமானவற்றைச் சேர்த்துள்ளது. இது வெளிப்பட்டுவிடும் என்று அஞ்சுகிறார் 56 இஞ்ச் நெஞ்சு கொண்ட மோடி அரசர். ‘மன் கி பாத்’ என்று மக்கள் மனதோடு! மாதாமாதம் பேசும் மோடி கடந்த நவம்பர் 28ஆம் தேதி வானொலியில் வழக்கம் போல் பொய்களை அள்ளி வீசினார். இந்திய பெற்றோர்கள் இப்போது தங்கள் பிள்ளைகள் ஓர் இடத்தில் வேலை பார்ப்பதைவிட மற்றவர்களுக்கு வேலை கொடுக்கும் நிலைக்கு தொழிலதிபர்களாக மாறுவதையே விரும்புகிறார்களாம். கொரோனா தொற்று காலத்திலும் 70 ஸ்டார்ட் அப் நிறுவனங்களை உருவாக்கி பெரும் சாதனை புரிந்துள் ளார்களாம். 70 ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் சந்தை மதிப்பு 100 கோடி டாலராம். இந்திய இளைஞர்கள் வேலையை எதிர் நோக்கி இருப்பவர்கள் அல்ல, மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பவர்களாக பரிமளிக்கின்றனர் என்று அளந்து விடுகிறார். எல்லாரும் வேலை கொடுப்பவர்கள் என்றால் யார் வேலை பார்ப்பவர்களோ? மோடிக்குத்தான் வெளிச்சம். உண்மையில் யதார்த்தம் என்னவென்றால், 2016லிருந்து இப்போது வரை 7,77,049 நிறுவனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதே காலத்தில் நாடு முழுவதும் 5,06,000 நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டுள்ளன. பண மதிப்பு நீக்கம் செய்யப்பட்டபின் 2017-18 காலக்கட்டத்தில்தான் அதிகமான நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. அதாவது ஓர் ஆண்டு காலத்தில் 2,36,262 நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இந்தத் தகவல்கள் எல்லாம் நாடாளுமன்றத்தில் மோடி அரசால் கொடுக்கப்பட்டதுதான். இப்படி ஏற்கனவே செயல்பட்டு வந்த நிறுவனங்கள் லட்சக்கணக்கில் மூடப்பட்டதால் வேலை இழந்த இளைஞர்கள் எண்ணிக்கை கோடியை நெருங்கும். இதில் 70 நிறுவனங்களை இளைஞர்கள் தொடங்கி ஏராளமானவர்களுக்கு வேலையளிக்க உள்ளார்கள் என்கிறார் மோடி. எங்கிருந்து எல்லாருக்கும் பணம் வரும் தொழில் தொடங்க. வங்கிகளில் இருக்கிற பணத்தையெல்லாம் நீரவ் மோடி, மல்லய்யா, அதானி, அம்பானி என்று எடுத்துக் கொண்டு திரும்பச் செலுத்தாமல் இருக்கும்போது, இந்த இளைஞர்களுக்கு எங்கிருந்து பணம் வரும். மோடிக்கு எப்போது பேசினாலும் தமிழ்நாட்டுப் பாசம் வந்துவிடும். இந்த முறை தூத்துக்குடியைப் பற்றி பேசியிருக்கிறார். தூத்துக்குடி மாவட்ட மக்கள் பனை மரம் நட்டு மண் சரிவைத் தடுக்கிறார்கள் என்று பாராட்டி யிருக்கிறார். மோடி பாராட்டுகிறார் என்றாலே அடுத்து அதள பாதாளத் திற்குள் தள்ளப் போகிறார் என்று அர்த்தம். தமிழக கடற்கரைகளை அதானிக்குத் தாரை வார்த்துவிட்டு, தூத்துக்குடி மாவட்டத்திற்கு பக்கத்தில்உள்ள கூடங்குளத்தில் அணுஉலைகளை அமைத்து கடற்கரைகளை சுடுகாடாக்கும் மோடி அரசு இயற்கையைப் பாதுகாப்பது பற்றிப் பேசுகிறது. பொய்யையே வாழ்க்கையாகக் கொண்டவர்கள். மாறிவிட மாட்டார்கள் மதவெறி பாசிஸ்ட்டுகள். ❑

# 'ஜெய் பீம்'மைச் சுற்றி

சங்கரந்தம்பி

ஜெய்பீம். இந்த முழக்கம் எல்லாருக்கும் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுத்தாலும் சிலருக்கு மட்டும் ஆத்திரத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்துகிறது. அப்படிச் சிலரை எரிச்சலடையச் செய்துள்ளது, ஞானவேல் இயக்கத்தில் சூர்யா நடிப்பில் வெளிவந்துள்ள,"ஜெய்பீம்" திரைப் படம். திரைப்படத்தில் வன்னியர் சாதி அடையா ளமான 'நெருப்புச் செம்பு' படம் போட்ட காலண்டர், கொலை பாதக போலீஸ் எஸ்.ஐ வீட்டின் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது, வன்னியர் அனைவரையும் இழிவு படுத்தி விட்டது என்ற அன்புமணி ராமதாஸ். கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் ஒரு சாதியினரை தவறாகச் சித்தரிக்கலாமா? அராஜகப் போலீஸ் வீட்டில் அப்படிக் காட்டியதன் மூலம் ஒட்டுமொத்த வன்னியர் சாதியினரையும் அராஜகப் பேர்வழிகள் என்று சொல்கிறீர்கள் சூர்யாவுக்கும் ஞானவேலுக்கும் அச்சுறுத்தும் தொனியில் அன்பு(மணி) மிரட்டல் தொடுத்தார். அதனைத் தொடர்ந்து அந்தப் படம் நீக்கப் பட்டது. ஆனாலும் அத்தோடு நிற்கவில்லை. அடுத்து ஒன்றை எடுத்துக் கொண்டார். சந்துரு என்றும் ராஜாகண்ணு என்றும் பெருமாள்சாமி என்றும் நடந்த உண்மைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களின் உண்மைப் பெயரையே திரைப்படத்திலும் பயன்படுத்திக் கொண்டுவிட்டு போலீஸ் எஸ்ஐக்கு மட்டும் குருமூர்த்தி என்று எப்படி பெயர் வைத்தீர்கள். இறந்துபோன வன்னியர் சங்கத் தலைவர் குருவின் பெயர் தானே அது என்று கிளப்பிவிட்டார்.

சூர்யாவின் படம் எங்கும் ஓடாது என்றும் நடமாட முடியாது என்றும் சகட்டுமேனிக்கு மிரட்டல்கள். இதில் வேடிக்கை என்ன வென்றால், குருவின் மரணத்திற்குப் பின்னர் அக்குடும்பத்தை ராமதாஸ் கண்டு கொள்ளவே யில்லை என்று பொருமியவர்கள் கூட இப்போது அன்புமணி பக்கம் சேர்ந்து கொண்டார்கள். இதை எதிர்பார்த்துதான் அன்புமணியும் அப்படி ஒரு பிட்டைப் போட்டார் போலும். சூர்யா இப்படி எங்கள் சாதியை இழிவுபடுத்தி விட்டதால் 20 கோடி ரூபாய் நஷ்டஈடு தர வேண்டும் என்று ஒரு பக்கம். நீ உயிருடன் நடமாட முடியுமா? என்று இன்னொரு பக்கம். சாதி அரசியல் அப்பட்டமாக வெளிப்படுகிறது.

சூர்யா பக்கம் நாங்கள் நிற்போம் என்று பாரதிராஜா சூர்யாவுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவுடன் உங்கள் தேவர் படத்தினை அந்தப் பின்னணியில் காட்டியிருந்தால் நீங்கள் சும்மா இருப்பீர்களா? என்று பாரதிராஜாவின் சாதியை வம்புக்கு இழுப்பது மட்டுமின்றி, முக்குலத்தோரையும் தனக்கு ஆதரவாக வர மறைமுகமாக அழைப்பு விடுக்கிறார். 'நெருப்புச் செம்பு' வன்னியர் சாதிக்கான அடையாளம் என்பது நிறைய பேருக்குத் தெரியாமல் இருந்ததை தெரியப்படுத்தியதோடு மட்டு மல்லாமல், அந்தக் காட்சியை மீண்டும் ஒருமுறை நிறைய பேரைப் பார்க்க வைத்த பெருமையும் அன்புமணியைச் சாரும்.

சமீபத்தில் நடந்த பாமக கூட்டம் ஒன்றில் மருத்துவர் ராமதாஸ், அறுபது தொகுதிகளை நாம் வென்று விட்டால் அடுத்த முதல்வர் அன்புமணிதான், அதற்காக நீங்கள் தமிழ்நாடு முழுவதும் செல்ல வேண்டும் வீடு வீடாகப் பிரச்சாரம் செய்ய வேண்டும் திண்ணைகளில் படுத்துறங்கி மக்களிடம் மாற்றம் முன்னேற்றம் அன்புமணி என்று சொல்லி வாக்குச் சேகரிக்க வேண்டும் என்று பேசியுள்ளார். தமிழ்நாட்டின் முதல்வராக வர விருப்பப்படுபவர் ஒரு சாதிக்கான முன்னேற்றத்தை மட்டுமே பேசக் கூடியவராக இருக்க முடியுமா? முதல்வர் என்பவர் அனைத்து மக்களுக்குமானவராக இருப்பது மட்டுமின்றி, அடித்தட்டில் இருக்கக் கூடியவர்களுக்கு, அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு இருக்கக்கூடியவர்களுக்கு ஆதரவானவராக அல்லவா இருக்க வேண்டும்.

நிஜத்தில் ராஜாக்கண்ணு மனைவியின் பெயர் பார்வதி. திரைப்படத்திலோ அவருக்கு செங்கேனி என்று வைத்துள்ளார்கள். பல கதை மாந்தர்களின் பெயர்களும் திரைப்படத்தில் மாற்றப்பட்டுள்ளது. ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவியோ அல்லது அடிப்படையாகக் கொண்டோ திரைப்படம், நாவல் எதுவேண்டு மானாலும் வரலாம். அதில் என்ன மாதிரியான காட்சி அமைப்புகள் வைக்க வேண்டும் என்பது அதைப் படைப்பவர்களின் உரிமை சுதந்திரம். திட்டமிட்டு ஒருவரை இழிவுபடுத்த வேண்டும் என்று ஒரு படைப்பு உருவாக்கப்படுமானால் அதைக் கண்டனம் செய்வதில் எவ்விதத் தவறும் இல்லை.

ஜெய்பீம் படத்தில் காட்டப்படும் போலீஸ் போல் எதார்த்தத்தில், சமூகத்தில் அந்த குறிப்பிட்ட சாதியில், அல்லது ஆதிக்க சாதி களில் யாரும் இல்லை என்று சொல்லி விட முடியுமா? இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடக்கும் பல தாக்குதல்களில் நடவடிக்கைகள் அல்லது வழக்குகூட பதியப்படாமல் இருக்கி றார்கள் பல காவல்நிலையங்களில் உள்ள சாதி ஆதிக்க மனோபாவம் உள்ள காவல் அதிகாரி களும் காவலர்களும்.

'ஜெய் பீம்' திரைப்படத்தில் எஸ்.ஐ. குருமூர்த்தி வீட்டில் உள்ள காலண்டர் மூலம் அவர் வன்னியர் என்று காட்டியதுபோல், அவருக்காகப் போராடியவரும் வன்னியர்தான் என்று நீங்கள் ஏன் காட்டவில்லை என்று அன்பு கேட்கிறார். அதற்கு இயக்குநர் ஞானவேல், போராடியவர் ஒரு கம்யூனிஸ்ட் தோழர், கம்யூனிஸ்ட்களுக்கு கம்யூனிஸ்ட் என்பதுதான் அடையாளம். அவர்கள் சாதி, மதத்தைக் கடந்தவர்கள் என்று பதில் அளித்திருக்கிறார். இயக்குநர் ஞானவேல், ஒட்டு மொத்த கதை, திரைக் கதை மற்றும் காட்சி அமைப்புக்கும் நான் மட்டுமே பொறுப்பு, சூர்யாவிற்கு இது பற்றி எதுவும் தெரியாது என்றும் அதற்காக தான் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாக அறிவித்த பின்னரும் 'ஜெம் பீம்' திரைப்படக் குழுவினர் மீதான தாக்குதல்கள் தொடர்வது என்பது ஆபத்தானது. கருத்து சுதந்திரத்திற்கு எதிரானது.

இது பெருமாள் முருகன் எழுதிய 'அர்த்தநாரி' நாவலை வைத்துக் கொண்டு சங்கிகள் செய்த அடாவடிச் செயலுக்கு ஒப்பானது. பெருமாள் முருகனை மன்னிப்புக் கேட்க வைத்ததுபோல், ஞானவேலையும் கேட்க வைத்துள்ளார்கள். சங்கிகளின் சங்கமத்தில் இவர்கள் இருக்கிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகிறது. சர்ச்சைக்குப் பின்னர், அன்புமணி குறிப்பிட்ட அந்தக் காலண்டரை மாற்றிவிட்டு, லட்சுமிப்பட காலண்டர் காட்டப் படுகிறது திரைப்படத்தில். சங்கிகள், சாமிப் படத்தைப்போட்டு ஒரு இந்துவை இப்படி நீ இழிவுபடுத்தலாம் என்று பெரிய அளவில் வரிந்து கட்டிக் கொண்டு வரவில்லை. எச்.ராஜா மட்டும் ஏன் லட்சுமிபடம் என்று கேட்கிறார். திரைப் படத்தில் மட்டுமல்ல, நிஜத்திலும் பாதிக்கப்பட்ட பார்வதியும் இறந்துபோன ராஜக்கண்ணுவும் இந்துக்கள்தான். இந்தச் சங்கிகள் இப்போது நடக்கும் சர்ச்சையில் இந்துப் பார்வதியின் பக்கம் இல்லையே ஏன்? எச். ராஜாவுக்கு ராஜாகண்ணும் பார்வதியும் இந்துவாகத் தெரியவில்லையே ஏன்?

இந்தச் சாதிச் சர்ச்சையில் பார்வையாளர் களாகச் சங்கிகள் மட்டுமல்ல, சமூகநீதி காக்கும் ஆட்சியாளர்!களும்கூட பார்வையாளர்களாகவே உள்ளார்கள். தமிழக முதல்வர் ஸ்டாலின், ஜெய் பீம் திரைப்படத்தைப் பார்த்துவிட்டு எனக்கு இரவெல்லாம் தூக்கம் வரவில்லை என்றார். அவரின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அது படம் அல்ல, பாடம் என்றார். அடுத்தடுத்து இருளர், குறவர் மக்களைக் கூட சந்தித்தார்கள். சில உதவிகளைக்கூட செய்தார்கள். ஆனால், அந்த மக்கள் நிரந்தரமாக தங்கள் வாழ்க்கையை நல்லபடியாக அமைத்துக் கொள்ள இதுவரை எந்தவொரு அறிவிப்பும் வரவில்லை. தமிழ் நாட்டில் உள்ள பழங்குடி மக்கள், பலர் அந்தத் திரைப்படத்தில் காட்டப்படுவதுபோல் இன்றும் கூட பொய் வழக்குகளில் சிக்க வைக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்கள் வாழ்ந்த வனத்தில் வாழ்வாதாரம் இல்லை. வருமானம் இல்லை. வாழ வழியில்லை. செங்கற் சூளைகளில் மரம் வெட்ட என்று பல வேலைகளைப் பார்க்கி றார்கள். ஆந்திராவிற்கு மரம் வெட்டச் சென்றவர்களை செம்மரக் கடத்தலில் ஈடுபட்டார்கள் என்று சொல்லி பொய் வழக்கு போடப்பட்டு சிறையில் அடைக்கப்பட் டுள்ளார்கள். அவர்களை மீட்க இந்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறது?

இப்பவும் திருக்கோயிலூர் வழக்கில் பத்து ஆண்டுகளுக்குப் பின்னரும் நீதி கிடைக்க வில்லை. அன்றைய விழுப்புரம் மாவட்டத்தில், 2011 நவம்பர் 11 அன்று திருக்கோயிலூர் காவல் நிலையத்தில் நான்கு பழங்குடியினப் பெண்கள், காவலர்களால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டார்கள். அந்த வழக்கு இன்று வரை விசாரணைக்கே வரவில்லை. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, அது திருத்தத்திற்காகத் திருப்பி அனுப்பட்டு என்று பத்தாண்டுகளாக விசாரணையே நடைபெறாமல் உள்ளது. குற்றவாளிகளுக்கு இதுவரை அழைப்பாணை கூட அனுப்பப்படவில்லையாம். இதுபோன்ற வழக்குகள் தமிழ்நாடெங்கும் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கின்றன. குறிப்பாக பழங்குடியினர் மீதான பல வழக்குகளில் நீதி கிடைக்காமல் இருக்கின்றன. ஜெய் பீம் பார்த்து தூக்கத்தைத் தொலைத்த முதல்வர் ஸ்டாலின் அவர்கள் இதுபோன்று நீதிக்காகக் காத்துக் கிடக்கும் வழக்குகளை விரைந்து நடத்தி பாதிக்கப்பட்ட வர்களுக்கு நீதி கிடைக்க உடன் வழி செய்வாரா?

காவல்நிலையப் படுகொலைகள் என்பது

தொடர்கதையாகவே உள்ளன. அதற்கு சமீபத்திய சாட்சி, சாத்தான்குளம் ஜெயராஜ், பென்னிக்ஸ். தந்தை மகன் இருவரும் அடித்துக் கொல்லப் பட்டது. அந்த வழக்கும்கூட மடைமாற்றிவிடப் படுவதாக இழுத்தடிக்கப்படுவதாகச் சொல்லப் படுகிறது. இன்னும் எத்தனையோ சித்தரவதை கள், கொடுமைகள், கொலைகள் காவல் நிலையங்களில் நடந்து கொண்டிருக்கின்றன வெளியே தெரியாமல். இடதுசாரி தினசரி பத்திரிகை ஒன்றில் வந்த ஜெய்பீம் திரைப்பட விமர் சனத்தில், ஜெய்பீம் திரைப்படத்தில் காட்டப்படும் காவல் நிலையச் சித்தரவதை கொஞ்சம் அதீதமாகக் காட்டப்பட்டுள்ளதாகக் கூறப் பட்டுள்ளது. ஜெய்பீம் திரைப்படத்தில் காட்டப்பட்ட கொடுமையை விட நிஜத்தில் அதிகம் என்றுதான் நீதிபதி சந்துரு அவர்கள் ஒரு பேட்டியில் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல, சாத்தான்குளம் சம்பவத்தில் இறந்துபோன தந்தையும் மகனும் குதத்தில் இருந்து இரத்தம் வரும் அளவிற்கு கொடூரமாகத் தாக்கப்பட் டார்கள். இதுபோன்ற கொடுமைகள், காவல் நிலைய கஸ்டடிக் கொலைகள் ஏதாவது காவல் நிலையத்தில் அன்றாடம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அரசு முன்வருமா?

காவலர்களுக்கு வார விடுமுறை அளிக்க உத்தரவிட்டுள்ள அரசு, காவல்நிலையங்களில் புகார் அளிக்க வருபவர்களிடம் கண்ணியமற்ற முறையில் நடந்து கொள்ளும் காவலர்களுக்கு கவுன்சிலிங் கொடுக்கவும் இதுபோன்ற கொடுமைகளைத் தடுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளுமா? அல்லது கடந்த காலங்களில் மக்கள் பிரச்சினைகளை பேசிய திரைப்படங்களை திரையிடுவதற்கு தடை விதித்ததுபோல், சிலர் எதிர்த்தார்கள் என்பதற்காக, அவர்களின் வாக்குகள் வேண்டும் என்பதற்காக திரைப் படங்கள் திரையிடுவதற்கு தடை விதித்ததுபோல் ஜெய் பீம் திரைப்படத்திற்கும் தடை விதிக்கப் படுமா?

எம்ஜிஆர் முதல்வராக இருந்தபோது கோமல் சுவாமிநாதன் எழுதி பாலசந்தர் இயக்கிய 'தண்ணீர் தண்ணீர்' படம் நாட்டின் அவலத்தைப் பேசியதால், தன் ஆட்சியின் அவலத்தை எடுத்துக் காட்டியதால், அப்படத்தை திரையிடத் தடைவிதித்தார். டாவின்சிகோட் திரைப்படம் கிறிஸ்தவர்களின் உணர்வுகளைப் புண் படுத்து கிறது என்று சொன்னதால் அப்படம் தமிழகத்தில் திரையிடுவதை கருணாநிதி முதல்வராக இருந்தபோது அப்படம் திரையிடு வதற்கு தடை விதித்தார். சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் காட்டி ஜெயலலிதா விஸ்வரூபம் திரைப் படத்திற்குத் தடை விதித்தார்.

அன்புமணி ராம்தாஸ் பஞ்சாயத்துத் தலைவர் சாதி ஆதிக்க வெறியுடன் செயல் படுவதாகக் காட்டப்பட்டுள்ளது என்று பொரு முறுகிறார். ஜெய்பீம் திரைப்படத்தை வைத்துக் கொண்டு அன்புமணி கட்சியினரும் சாதியினரும் திரைப்படத்தில் காட்டப் பட்டுள்ளதுபோல் பழங்குடி மக்களின் மீது, இன்றளவும் தொடரும் கொடுமையை, சாதிய ஒடுக்குமுறையை திசை திருப்பப் பார்க்கிறார்கள். சமீபத்தில் தஞ்சை மாவட்டம் திருவைக்காவூரில் தலித் மக்கள் பொது இடத்தில் பேனர் வைத்ததற்கு வன்னியர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்று பேனர் வைப்பது நிறுத்தப்பட்டது மட்டுமின்றி, தலித் மக்களை வன்னியர்கள் தாக்கினார்கள். அவர்களுக்கு ஆதரவாக காவல்துறையினர் தலித் மக்கள் வீடுவீடாகச் சென்று தாக்குதல் நடத்தி அவர்களைக் கைது செய்தார்கள். கடந்த தேர்தலின் போது பாஜகவினரும் பாமகவினரும் சேர்ந்து கொண்டு சிதம்பரம் தொகுதியில் தலித் மக்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை வீட்டைக் காலி செய்ய வைத்த கொடுமை யெல்லாம் நிஜத்தில் நடக்கும்போது அது போன்ற கொடுமைகளைத் திரைப்படத்தில் காண்பித்தால், திரைப்படத்தின் மூலம் மக்கள் மனதில் பதிய வைத்தால் இவர்களுக்குப் பதற்றம் ஏற்படுகிது.

'ஜெய்பீம்' திரைப்படக் குழுவினருக்கு எதிராக பல்வேறு வகைகளில் தொடரும் தாக்குதல்களை தமிழகத்தின் இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக இயக்கத்தைச் சேர்ந்த வர்கள் கண்டித்துள்ளார்கள். இப்படிப்பட்ட சூழலில் தமிழக அரசு இதில் உடனடியாகத் தலையிட்டு, ஜெய் பீம் படக்குழுவினருக்கு எதிராகப் பேசியும் மிரட்டியும் பதற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறவர்களை தடுக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இது படம் அல்ல, பாடம் என்று சொன்னதை, அது போன்ற பாடங்களை மக்களிடத்தில் கொண்டு செல்வதற்குத் தடை ஏற்படுத்துபவர்களைத் தடுத்திட வேண்டும். இல்லையென்றால், திரைப்படத்தில் சீர்திருத்தக் கருத்துக்களை முற்போக்கு விழுமியங்களைப் பேசி மக்களைக் கவர்ந்து ஆட்சியைப் பிடித்த அன்றைய திமுகவின் இன்றைய வாரிசு இவர்கள் என்பதற்கு அர்த்தம் இல்லாமல் போகும். இவர்கள் பெரியாரின் அண்ணாவின் வாரிசுகள் என்று சொல்வதில் அர்த்தம் இல்லாமல் போகும். ❑

# காக்சிச் சீருடையா அல்லது சிவப்புத் துண்டா?

**ரஞ்சனி**

பொய் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, காணாமல் போய்விட்டதாகச் சொல்லப்பட்ட தன் கணவனைத் தேடி அலைந்த ஆதிவாசிப் பெண்ணுடைய உண்மைக் கதையை அடிப்படை யாகக் கொண்டு உருவாக்கப்பட்ட 'ஜெய் பீம்' திரைப்படம் சாதிய ஒடுக்கு முறையின், காவல்துறையினரின் மிருகத்தனத்தின், எளிய மனிதர்களுக்கு எட்டாத சட்ட நிறுவனங்களின் அசிங்கமான முகத்தை அம்பலப்படுத்தி நம் மனதை உலுக்குகிறது. தங்கள் குடும்பத்தினர் சிறையில் இருந்து வெளியே வரும்போது அழைத்துச் செல்வதற்காகக் காத்திருக்கும் ஏழை மக்கள்தான் முதல் காட்சியே. அவர்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக, சிறையில் இருந்து வெளியே வரும் ஒடுக்கப்பட்டவர்கள் கீழ் சாதி அடிப்படையில் பிரிக்கப்பட்டு, உண்மைக் குற்றவாளிகளைப் பிடிக்க முடியாததால், வழக்கை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்பதற்காக, மீண்டும் பல்வேறு காவல்நிலையங்களுக்கு பொய் வழக்கு போடு வதற்காக பிரித்து அனுப்பப்படுகிறார்கள். 12 பேர் மீது பொய் வழக்கு போடுகிறது போலீஸ். அதில் ஒருவரின் குடும்பம் கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவரின் உதவியால் வழக்கறிஞர் சந்துருவாக நடித்துள்ள சூர்யாவின் மூலம் நீதிமன்றத்தை நாடுகின்றனர். ஏதும் அறியாதவர்களின் அறியாமையை நிரூபிக்க, புனையப்பட்ட பொய் வழக்குகளையும் அதில் தொடர்புடைய அதிகாரியையும் அம்பலப்படுத்த என அவரின் போராட்டம் இங்கிருந்து தொடங்குகிறது.

வழக்கறிஞர் சந்துரு, ஒரு கலகக்காரர், ஒரு கம்யூனிஸ்ட், பல்வேறு பிரச்சினைகளுக்காகத் தெருவில் இறங்கிப் போராடுகிறார். போராட் டங்களை தலைமை ஏற்று நடத்துகிறார். மனித உரிமைப் பிரச்சனைகளுக்காக நீதிமன்றத்தில் வாதாடுகிறார். செங்கேணியாக வரும் லிஜிமோல் ஜோஸ், காணாமல் போன தன் கணவனைக் கண்டு பிடித்துக் கொடுக்க வேண்டி, முதியோர் கல்வித் திட்ட ஆசிரியரின் உதவியுடன் அவரைச் சந்திக்கிறார். திரைப்படம் நீதிமன்ற நடவடிக்கை




களையும் அந்த நடவடிக்கைகள் மூலம் செங்கேணியின் கணவர் ராஜாக்கண்ணுவாக வரும் கே.மணிகண்டன் காணாமல் போனதில் உள்ள மர்மம் வெளிக்கொணரப்படுவதையும் ராஜாக்கண்ணு காவல்நிலையச் சித்தவதையால் கொல்லப்பட்டதற்கு நீதி கேட்பதையும் திறம்படக் காட்டியுள்ளது.

ஒரு பக்கம் அடிப்படை உரிமைகள், வாய்ப்புகள், வசதிகள் மறுக்கப்பட்ட ஆதிவாசிகளின் அவல நிலையை அப்படியே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது திரைப்படம். சமூகத்தில் கீழ் நிலையில் உள்ள அவர்களுக்கு வாழ்வதற்கான அடிப்படை குறைந்தபட்ச உரிமைகள் கூட உத்தரவாதமில்லை. அவர்களை மோசமாக நடத்தவும் பாகுபாடு காட்டவும் சுரண்டவும் கேள்வி கேட்க முடியாத அதிகாரம் உள்ளவர்களாக ஒவ்வொருவரும் உள்ளனர். பரம்பரை பரம்பரையாக எலி பிடித்தலும் பாம்பு பிடித்தலையும் பாம்புக் கடிக்கு சிகிச்சை அளிப்பதையும் செய்து வரும் எளிய, நாடோடி

சமூகத்தினர் வேலை பார்க்கும் இடங்களில், அக்கம் பக்கத்தில், அரசு அலுவலகங்களில் கொடூரமாக வஞ்சிக்கப்படுகிறார்கள்.

இன்னொரு பக்கம் வழக்கின் ஊடேயே, பல்வேறு பிரச்சினைகளில் ஒதுக்கப்பட்ட மக்கள் சந்திக்கும் ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் அவர்களுக்காக யாரும் இல்லாததையும் அந்த சமூகத்தினருக்கு நீதி மறுக்கப்படுவதையும் படிப்படியாக விவரிக்கிறது திரைப்படம். செங்கேணியின் அதிர்ச்சியளிக்கும், இடைவிடாத போராட்டத்தின் வாயிலாக, ஒட்டுமொத்த பழங்குடியின மக்கள் மீதும் பொய்க் குற்றம் சுமத்தும் அருவருக்கத்தக்க குற்ற நடவடிக் கையை கண் முன் கொண்டு வந்து காட்டுகிறது. தாங்கள் செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ளச் செய்வதற்கு காவல் நிலையங்களில் நடக்கும் மூன்றாம் தர சித்தரவதைகளையும் அதனைத் தொடர்ந்து அவர்கள் தண்டிக்கப்படுவதையும் திரைப்படம் சமரசமின்றி வெளிப்படுத்தியுள்ளது. தாங்கள் செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ள மறுப்பவர்கள் கொடூரமான சித்தரவதைக் குள்ளாக்கப்பட்டு இறுதியில் இறந்து போகிறார் கள் ராஜாக்கண்ணுவைப் போல. காவல் நிலையத்தில் இருந்து தப்பிவிட்டார்கள் என்ற பின்னணியில் ஒட்டு மொத்த சமூகத்தினரும் பயமுறுத்தப்படுகிறார்கள். ஆண்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதற்காக பெண்களை பாலியல் சித்தரவதைக்குள்ளாக்கும் மற்றொரு யுத்தியும் கையாளப்படுகிறது.

காவல்துறையின் அத்துமீறல்கள் என்பது ராஜாகண்ணு வழக்கில் மட்டுமில்லை ஆதிவாசி மக்கள் மீது பொய் வழக்குகள் போடுவது என்பது ஒரு தொடர் செயல் என்பதை ஆரம்பத்தில் இருந்தே திரைப்படம் கண் முன்னே காட்டுகிறது. கிராமத்தில் நடக்கும் கூட்டத்தில் ஐ.ஜி. பெருமாள்சாமியிடம் போலீஸ் கொடுமையால் தாங்கள் எந்தளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளோம் என்பதைச் சொல்கிறார்கள். ஒரு பெண், தன் கணவர் பொய்க் குற்றத்தை ஒப்புக் கொள்ள வைப்பதற்காக தான் எந்தளவிற்கு பாலியல் வன்முறையை அனுபவித்தேன் என்று கூறுவதைக் கேட்கும் போது நமக்குப் பதறு கிறது. ராஜாக்கண்ணுவின் அக்கா பச்சையம்மா, காவல் நிலையத்தில் ஆடை அவிழ்க்கப்பட்டு, தன் சகோதரன் மற்றும் உறவினர்கள் முன்பு பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுகிறார். காவல் துறையினர் ஆபாச வார்த்தைகளால் செங்கேயையும் பச்சையம்மாவை திட்டுகிறார்கள். மேலும் காவல்துறை சட்ட விதிகளையயெல்லாம் காற்றி பறக்கவிட்டுவிட்டு, செங்கேணியை ஒரு பெண்ணை, அதுவும் நிறைமாதக் கர்ப்பிணியை இரவில் அடித்து இழுத்து கைது செய்கிறது. படம் காவல்துறையின் ஆணாதிக்கப் போக்கை அடிக் கோடிட்டுக் காட்டுகிறது.

சாட்சிகள் அடிப்படையிலான சட்ட விசாரணையை, நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் இப்படம் மிகச் சிறப்பாகவே இதுவரை இல்லாத வகையில் காட்டியுள்ளது. ஒவ்வொன்றுக்கும் சாட்சிகள் வேண்டும் அது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவும் வேண்டும். காவல்நிலையப் படுகொலைகளில், பொய் வழக்குகளில் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியவர்களே குற்றவாளிகளாக இருக்கும் போது, அதிகாரிகளும் அரசு எந்திரமும் அவர்கள் பின்னால் இருக்கும்போது, பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் அவ்வளவு எளிதாக அவர்களை எதிர்த்துப் போரிட்டு விட முடியுமா? சந்துரு போன்ற ஒரு பிரபலமான வழக்கறிஞர், மக்களுக்காகப் பாடுபடக்கூடியவரே பல இன்னல்களைச் சந்தித்து, கடும் முயற்சிகள் மேற்கொண்டு ராஜாக்கண்ணுவின் மரணத்தை நிரூபித்து செங்கேணிக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டியுள்ளது. ஐ.ஜி. பெருமாள்சாமியின் ஒத்துழைப்பு இல்லை என்றால் இந்த வழக்கு என்னவாகியிருக்கும்? அந்த வகையில், காவல் துறையின் அத்துமீறல்களையும் ஊழலையும் அம்பலப்படுத்தும் அதேவேளை அதே நிறுவ னங்கள் மீது ஒருவித நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருக்கிறது இந்தத் திரைப்படம். அரசியலமைப்புச் சட்டத்தின் வழியிலான போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி என்றபோதும் அது அவ்வளவு எளிதானது அல்ல என்பதை இயக்குநர் ஞானவேல் எடுத்துரைத் துள்ளார். ஆதிவாசிகளுக்கும் எளிய மக்களுக்கும் இந்த அரசியலமைப்புச் சட்ட வழிகள் எல்லாம் எட்டாக் கனிதான். எத்தனைபேர் நீதிமன்றத்தை நாட முடிகிறது? எத்தனை பேருக்கு சந்துரு போன்ற வழக்கறிஞர் கிடைக்கிறார்? எத்தனை பேர் இந்த நீண்ட நெடிய போராட்டத்தை வலியுடன் எதிர்கொள்வார்கள்? பெரிய கேள்வி தான். ஜனரஞ்சக சினிமாவின் எல்லைக்குள் இருந்து கொண்டே கம்யூனிஸ்ட் கட்சி, மனுக் கள் கொடுப்பதை, போராட்டங்கள் நடத்துவதை, கம்யூனிஸ்ட் வழக்கறிஞரை, வழக்கிற்குத் தேவையான ஆதாரங்களைக் கொண்டு வருவதை, அதன் மூலம் வழக்கை வெளிச்சத்திற்குக்

கொண்டுவருவதையெல்லாம், நீதியைப் பெறும் நெடும் பயணத்தில் வழக்கறிஞர் சந்துருவை பிரதானமாகக் காட்டியபோதும், படம் பிடித்துக் காட்டியுள்ளது.

சந்துரு ஒரு கம்யூனிஸ்ட் என்பதை இப்படம் அடையாளப்படுத்துவதை யாரும் பார்க்காமல் கடந்து போய்விட முடியாது. செங்கொடியோடு மக்களுடன் நின்று போராடுவது, சுவரொட்டிகள் ஒட்டுவது, அரிவாள் சுத்தியல் போட்ட துண்டறிக்கைகள் கொடுப்பது, சிவப்புத் துண்டு போட்டவர்களுடன் உரையாடுவது, கம்யூனிஸ்ட் அலுவலகத்தில் உட்கார்ந்து பேசுவது, மெரினா கடற்கரையில் தொழிலாளர் சிலை முன்பு போராட்டம் நடத்துவது என்று சந்துரு ஒரு கம்யூனிஸ்ட் என்பதை படம் தெளிவாகவே காட்டியுள்ளது. அவர் அலுவலகத்தில் கார்ல் மார்க்ஸ், அம்பேத்கார், பெரியார் படங்கள். செங்கேணியுடன் அவர் பேசும்போதெல்லாம் கார்ல் மார்க்ஸின் படம் அவர் பின்னால் தெரிகிறது. அதுபோல் படத்தின் இறுதிக் காட்சியில் லெனின் சிலை காட்டப்படுகிறது. இந்தப்படம் மக்களுக்காக எந்த அளவிற்கு கம்யூனிஸ்ட்டுகள் அர்ப்பணிப்புடன் செயல்படு கிறார்கள் என்பதை நேர்மறையாகக் காட்டி யுள்ளது இப்படம். சந்துரு பாத்திரம்தான் பிரதானமானது என்றாலும் கூட, படம் தனி மனித துதி பாடலுக்கு எதிராகப் பேசுகிறது. மலர் மாலையும் துண்டுடனும் வருபவர்களிடம் இங்கு யாரும் கடவுள் இல்லை, மாலையும் துண்டும் வேண்டாம் என்று அவர் வீட்டில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. சந்துருவின் வாழ்க்கை முறை ஒரு கம்யூனிஸ்ட் வாழ்க்கை முறை. எளிமையான வீடு. தானே சமைக்கிறார். இரயிலிலும் மோட்டார் பைக்கிலும் பயணம். சிறிய கடைகளில் சாப்பாடு, டீ. செங்கேணி யையும் அவர் குழந்தையையும் தன் வீட்டிலேயே தங்க வைத்து பாராமரிப்பது. இவையெல்லாம் ஒரு கம்யூனிஸ்ட் வாழ்க்கை முறை. அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்பது வெளிப்படையாகவேத் தெரிகிறது. சூர்யா போன்ற நட்சத்திர நடிகர்கள் இது போன்ற பாத்திரங்களில் நடிப்பது என்பது மய்ய நீரோட்டச் சினிமாவில் எளிதில் காணமுடியாதது.

காவல்நிலையப் படுகொலையை மட்டு மின்றி, ஆதிவாசி மக்கள் பிரச்சினைகளான மனைப்பட்டா, கொத்தடிமைத் தொழில், குறைவான சம்பளம், கல்வியின்மை, கௌரவ மின்மை, வாக்குரிமையின்மை போன்றவற்றையும் இத்திரைப்படம் பேசுகிறது. அதுபோல மற்ற வழக்குகள், சம்பளம் கூடக் கேட்டதால் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆவின் தொழிலாளர்கள் தொடர்பான வழக்குகள் ஆகியவற்றைக் காட்டி யிருப்பதன் மூலம் படம் தொழிலாளர் சார்பு, அரசு நிறுவன எதிர்ப்பு நிலையையும் எடுத்துள்ளது. இப்படம் பல இடங்களில் காக்கிச் சட்டை எதிர் சிவப்புத் துண்டு என்கிற தோற்றத்தை உருவாக்குகிறது. உண்மையில் மார்க்ஸையும் அம்பேத்காரையும் போற்றுகிறது. ஒட்டு மொத்தத்தில் செங்கேணியின் கஷ்டமான வாழ்க்கையில், பயந்து வாழும் ஆதிவாசி மக்களிடத்தில் ஒரு சிறு சிவப்பு நம்பிக்கை ஒளியைக் காணமுடிகிறது. ❑

**தமிழாக்கம் – சங்கரந்தம்பி**

# மழை வெள்ளத்தில் மக்கள் பணி

செங்கற்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரியில் இருந்து கொட்டமேடு வரை செல்லும் சாலையில் பெருமாட்டு நல்லூர் சந்திப்பில் ஒவ்வொரு மழைக்காலத்திலும் பெரு வெள்ளம் ஏற்பட்டு சாலை போக்குவரத்து துண்டிக்கப்படும். 27.11.2021 அன்று பெருவெள்ளத்தில் சாலை துண்டிக்கப்பட்டு போக்குவரத்து ஸ்தம்பித்தது. சிபிஐஎம்எல் மாவட்டக்குழு உறுப்பினர் சி.இராஜேஸ்குமார் பெருமாட்டுநல்லூர் கிளைச் செயலாளர் சுதாகர் பெருவெள்ளத்திலும் செங்கொடி ஏந்தி போராட்டம் நடத்தினார்கள். அதிகாரிளுக்கு தகவல் போனதும் வண்டலூர் தாசில்தார் நேரடியாக வந்து ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றினார்.

திருநெல்வேலி மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி என்று சொல்லி வேலை நடக்கிறது. ஆனால், மழையில் சாலைகள், தெருக்களில் வெள்ளம். வெள்ளம் வடிந்தால் சகதி. கால்வாய்கள் தூர்வாரப்படவில்லை. திருநெல்வேலி குன்னத்தூர் சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் முன்னிலையில் கால்வாயை அதிகாரிகள் குடியிருப்பு பக்கம் வெட்டிவிட எத்தனித்தனர். உடனடியாக புரட்சிகர இளைஞர் கழக மாநிலத் துணைத் தலைவர் சுந்தர்ராஜ் மற்றும் தோழர்கள் தலையிட்டு அதிகாரிகளுடன் சண்டை போட்டு, கால்வாயில் உள்ள அடைப்பை அகற்றச் செய்து அதற்குரிய வழியில் தண்ணீர் செல்ல நடவடிக்கை மேற்கொண்டனர். ❑

# கட்சி வேலைகள் மறுசீரமைப்பு இயக்கம்

பகுதி–4

## இளைஞர் மாணவர் இயக்கத் திசைவழியும் கடமைகளும்

### இளைஞர் – மாணவர் இயக்கம்

### ஒரு அரசியல் – கலாசார இயக்கம்

தமிழக இளைஞர் – மாணவர்களுக்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அது போராட்ட பாரம்பரியம். தியாக பாரம்பரியம். போராட்டம் என்பது ஏதோ ஒரு சில கோரிக்கைகளுக்கான போராட்டம் அல்ல. சொந்த பயன் பெறும் சுயநலத்திற்கான போராட்டம் அல்ல. நாட்டுக்கான போராட்டம். இந்திய நாட்டு ஜனநாயகத்துக்கான போராட்டம். அரசியல் போராட்டம். புரட்சிகர அரசியல் போராட்டம்.

இந்திய நாட்டு விடுதலைப் போரில், ஆங்கிலேயர் எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில், தமிழ் இளைஞர் மாணவர்கள் தங்கள் இன்னுயிரை இந்த நாட்டுக்காக, தியாகம் செய்தார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தமிழ் இன உரிமைப் போராட்டமாக மட்டுமே காண்பது ஒரு பார்வை. இன்னொரு முக்கியமான பார்வை அது ஜனநாயகத்துக்கான போராட்டம் என்பது. அந்தப் போராட்டம் தமிழகத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக, எந்த ஒரு அகில இந்திய கட்சியும் ஆட்சிக்கு வர முடியாத அளவுக்கு ஆற்றல் கொண்ட ஒரு அரசியல் போராட்டம். அதுதான் மாணவர் இளைஞர்களின் போராட்ட வரலாறு.

இன்னொரு முக்கியமான கட்டம் என்பது நக்சல்பாரி போராட்டத்தால் உந்தப்பட்ட, அந்தப் புரட்சிகர போராட்ட வழிமுறையால் கவரப்பட்ட மாணவர் இயக்கங்களின் காலகட்டம். கல்கத்தாவில், வேறு பல பெருநகரங்களில் நக்சல்பாரி எழுச்சியால் கவரப்பட்ட மாணவர்கள், தங்கள் படிப்பை, அது முதலாளித்துவ படிப்பு என தூக்கி எறிந்துவிட்டு, கிராமங்களுக்கு சென்றார்கள். கிராமப்புற ஏழை, எளிய மக்கள் மத்தியில் புரட்சிகர அரசியல் தீயை சுடர்விட்டு எரியச் செய்வது மட்டும்தான் இந்த நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு ஒரு முழுமையான விடுதலையை, உண்மையான விடுதலையை, உழைக்கும் மக்கள், ஏழை, எளிய மக்கள் கைக்கு அதிகாரம் கைமாறும் ஒரு விடுதலைப் புரட்சியை நிதர்சனமாக்கும் என்று முழங்கினார்கள். அதன் எதிரொலியைத் தமிழகத்திலும் காண முடிந்தது.

புரட்சிகர கட்சியும் அந்த இளைஞர்களும் அந்த காலகட்டத்தில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை வரவேற்றார்கள், ஆதரித்தார்கள், செயலூக்கமாகப் பங்களித்தார்கள் என்பது வரலாறு.

### அய்சா – ஆர்ஒய்ஏ

### தமிழக முற்போக்கு, புரட்சிகர போக்குகளின் வழித்தோன்றல்

தமிழக மாணவர் இளைஞர் இயக்கத்தின் இன்றைய கட்டம் என்பது தமிழக இளைஞர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்ட மரபை, இந்தி எதிர்ப்பு, மொழி உரிமை உள்ளிட்ட திராவிட இயக்க முற்போக்கு மரபை, ஜனநாயகப் போராட்ட மரபை, நக்சல்பாரி எழுச்சி உள்ளிட்ட புரட்சிகர மரபை, பாரம்பரிய இடது மரபை உயர்த்திப் பிடிப்பதாக இருக்க வேண்டும். வீரம் செறிந்த அந்தப் போராட்ட மரபுகளின் வாரிசுதாரர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட, தமிழக இளைஞர்களின் போராட்ட மரபை உட்கொண்ட, ஒரு மாற்று அரசியலை, புரட்சிகர அரசியலை அடிப்படையாகக் கொண்ட ஒரு இளைஞர் இயக்கம் மட்டுமே, தமிழகத்தில் ஒரு மாற்று அரசியல் இயக்கமாக, மாணவர் இளைஞர் இயக்கமாக எழ முடியும்.

அப்படிப்பட்ட ஒரு இயக்கம் மட்டுமே தமிழகத்தின் முற்போக்கு மாண்புகளை,

முற்போக்கு விழுமியங்களைக் கட்டிக் காத்திட முடியும். அத்தகைய ஒரு இயக்கம் மட்டுமே , தமிழகத்தின் முற்போக்கு மரபுகளை சின்னாபின்னமாகச் சிதைப்பதன் மூலம், தமிழகத்தை காவிக் கோட்டையாக மாற்றிடத் துடிக்கும் பிற்போக்கு, மதவெறி, வலதுசாரி ஆர் எஸ் எஸ் பி ஜே பி போன்ற சக்திகளை வீழ்த்திட, துரத்தி அடித்திடத் தக்க இயக்கமாக இருக்கும். அப்படிப்பட்ட இயக்கமே, தமிழகத்தின் பிற்போக்கு மரபுகளை, நிலப்பிரபுத்துவ மாண்புகளை, வளர்ந்து வரும் வைகுண்ட ராஜன்களை உயர்த்திப் பிடிக்கும் போக்கிற்குத் தக்க பதிலடியாக இருக்கும்.

அதே போல, வரலாற்று மாண்புகளை, விழுமியங்களை மீட்கிறோம் என்கிற பெயரில், சீமான் சொல்வது போல, மாடு மேய்ப்பதை போற்றுவதையோ, மோடி சொல்வது போல், பகோடா விற்பதில் பெருமை பாராட்டுவதையோ நாம் கடுமையாக எதிர்க்க வேண்டியுள்ளது. தமிழ் மொழியின் தொண்மையை, தமிழ் மக்களின் வீர வரலாற்றை நாம் உயர்த்திப் பிடித்திட வேண்டும். ஆனால், தமிழ் சமூகத்திலும் முற்போக்கு மற்றும் பிற்போக்கு அம்சங்கள் வரலாறு முழுவதும் விரவிக் கிடக்கின்றன. நாம் தமிழ் சமூக வரலாற்றில் நிரவிக் கிடக்கும் உழைக்கும் தமிழ் மக்களின் போராட்ட மரபை, முற்போக்கு விழுமியங்களை உயர்த்திப் பிடிப்போமே தவிர, தமிழ் சமூகத்தை பின்னோக்கித் திருப்பும் பிற்போக்கு வலதுசாரி கருத்துக்களை ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம்.

இதைத்தான் தமிழக இளைஞர் மாணவர் இயக்கம் தனது கொள்கையாக, நோக்கமாக, செயல்பாட்டு வழிமுறையாக கொண்டிருக்கும்.

## பெரியார் கருத்துக்கள்

## ஆதிக்க எதிர்ப்பு கருத்துக்கள்

பெரியார் கருத்துக்கள் தமிழகத்தில் நிச்சயமாக ஒரு மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. சாதி வெறி சாதி ஆதிக்க சக்திகளுக்கு எதிராக, பார்ப்பனீயத்துக்கு எதிராக ஒரு மாபெரும் போர்ப் பிரகடனமாக அவர் கருத்துக்கள் அமைந்தன. இதர வட இந்திய மாநிலங்களை ஒப்பிடும் போது, தமிழகம் நிலப்பிரபுத்துவ கருத்துக்கள், மூடப் பழக்க வழக்கங்களை எதிர்த்துப் போரிடுவதில் ஒரு மிகப்பெரும் பங்காற்றி இருக்கிறது. பெண்ணடிமைத் தனத்தின் ஊற்றுக் கண்ணான நிலப்பிரபுத்துவ கருத்துக்கள் கோலோச்சிய சமூக, அரசியல் பின்னணியில், பெண்கள் விடுதலை கருத்துக்கோப்புகளை சக்தி வாய்ந்த விதத்தில் எடுத்துரைப்பதில் பெரியாருக்கு ஒரு மிகப் பெரும் பங்கு இருக்கிறது. அதே போல, ஒடுக்கப்பட்ட சாதிகள், வர்க்கங்களின் குரல் தமிழகத்தில் ஓங்கி ஒழித்திடவும் அது உதவி இருக்கிறது. அதுவே, ஒரு புதிய பார்ப்பனீயம், ஒரு புதிய ஒடுக்குமுறை சாதிகள், சக்திகள் ஆட்சிக்கு வரக் காரணமாக இருந்திருக்கலாம். சில முற்பட்ட, பிராமனர் அல்லாத சாதிகளும் கூட அதிகாரத்தைச் சுவைப்பதற்கு, பலம் பொருந்தியவையாக மாறுவதற்கு காரணமாகி இருக்கலாம். ஆனாலும், அவர் கருத்துக்கள் ஆற்றிய முற்போக்கு பாத்திரத்தை மறுப்பதற்கில்லை. அந்தப் புதிய ஆளும் சக்திகள், ஒரு காலத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவாக இருந்தார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. அதே போல, அனைத்து சாதி உழைக்கும் மக்கள், தலித்துகள், பெண்கள் உள்ளிட்ட பல ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு அது ஒரு முழு விடுதலையை வழங்கிடவில்லை என்பதும் உண்மைதான்.

பெரியார் கருத்துக்களை முற்போக்கு என சொல்வது, சீரழிந்துபோன, பெரியார் கருத்துக்களிலிருந்து பெருமளவு விலகிச் சென்றுவிட்ட, பல சமயங்களில் மென்மையான இந்துத்துவ மதவெறி அரசியலைக் கூட பிரதிபலிக்கிற, இன்றைய திராவிட கட்சிகளை ஆதரிப்பது என்று பொருள்படாது. ஆனால், அதே சமயத்தில், அவர்கள் பிஜேபியின் மதவெறி, பிற்போக்கு, வலதுசாரி அரசியலுக்கு எதிராக, உறுதியாக போராடுவார்களேயானால், பரந்த பாசிச (சர்வாதிகார) எதிர்ப்பு அரசியல் முகாந்திரத்தில் நின்று கொண்டு அதனை ஆதரித்திட, மதிப்பீடு செய்திட நாம் தயாராக இருக்கிறோம்.

## சமூக நீதி

இந்தப் பின்னணியில், சமூக நீதி என்பது வெறும் இட ஒதுக்கீடு மட்டுமோ, பிற்படுத்தப் பட்ட சாதிகள் மட்டுமோ சம்பந்தப்பட்டது அல்ல. மாறாக, அனைத்து உழைக்கும் மக்களுக்கு நியாயம் கிடைப்பதையே, அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைப் பதையே, அவர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு வழிகோலுவதையே சமூக நீதி என குறிப்பிட முடியும். அந்த விதத்தில், சமூக

நீதி என இன்று பொதுப்புத்தியால் அறியப்பட்டிருக்கும் ஒன்றை மறுவரையறை செய்திட வேண்டிய அவசியம் இருக்கிறது.

## திசைவழி

◆ இன்று நிலவுகிற புதிய சூழலில், மாணவர் இளைஞர்களின் உரிமைப் போர் தொடுக்கும் இயக்கமாக, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக, இளைஞர் மாணவர் இயக்கம் எழுந்திட வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. அந்த இளைஞர்-மாணவர் இயக்கம் ஒரு அரசியல் இயக்கமாகவும், அதே சமயத்தில், தமிழக மக்களின் மொழி, கலாச்சார மரபுகளை, உரிமைகளை முற்போக்கு விழுமியங்களை உயர்த்திப் பிடிக்கிற ஒரு கலாச்சார இயக்கமாகவும் அமைந்திடும்.

◆ அது மட்டுமல்ல, இந்திய மற்றும் தமிழக ஆளும் வர்க்கங்கள் நடைமுறைப்படுத்தி வரும் நவ தாராளவாதக் கொள்கைகளின் காரணமாக தலைவிரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டம், உழைப்புச் சந்தையை மலிவாக்கிட உருவான புதிய கல்விக் கொள்கையின் காரணமாக எழுந்து வரும் கல்விப் பிரச்சனைகள் போன்றவற்றையும் எதிர்த்து தீவிரப் போராட்டங்களை மேற்கொள்ளும்.

◆அதன் மூலம், இளைஞர் மாணவர்கள் சந்திக்கும் யதார்த்த வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான சீர்திருத்தப் பணிகளுக்காகவும் போராடும்.

◆கூடுதலாக, அதிகரித்து வரும் இந்தி-சமஸ்கிருத திணிப்பு முயற்சிகளையும், குலக் கல்வித் திட்டத்தைத் திணிக்கும் முயற்சிகளையும், ஆதிக்க சக்திகளின் அடிமைகளாக தமிழினத்தை மாற்றிட எத்தனிக்கும் முயற்சிகளையும் எதிர்த்துப் போராடும். இதுதான் இயக்கத்தின் பொதுவான திசைவழியாக இருக்கும்.

## வேலையில்லாத் திண்டாட்டம்

வேலையில்லாத் திண்டாட்டம் என்பது இளைஞர் மாணவர்களின் மிகப்பெரும் பிரச்சனையாக விசுவரூபம் எடுத்திருக்கிறது. கொரோணா காலத்திற்குப் பிறகு அது இன்னும் தீவிரம் அடைந்திருக்கிறது. 2014ல் மோடி ஆட்சிக்கு வந்தபோது, ஆண்டுக்கு ஒரு கோடி வேலைவாய்ப்பை உருவாக்குவோம் என்றார். மாறாக, அது ஆண்டு தோறும் லட்சக்கணக் கானோர் வேலையிழப்பாக மாறி இருக்கிறது. இருக்கிற வேலைகளிலிருந்து பல லட்சக் கணக் கானோர் வீதிகளில் தூக்கி எறியப்பட்டுள்ளனர். 70,000 பேருக்கு வேலை கொடுக்கிற தொழில் ஒப்பந்தங்களில் மு.க.ஸ்டாலின் அவர்கள் கையொப்பமிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் கூட யானைப் பசிக்கு சோளப்பொறி கொடுப்பது போலத்தான்.

அரசு மற்றும் பொதுத்துறை நிறுவங்கள் தனியார்க்குத் தாரை வார்க்கப் படுகின்றன. மலிவான விலைக்கு விற்கப் படுகின்றன. அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பு என்பது கிட்டத்தட்ட இல்லை என்றே சொல்லலாம்.

கிடைக்கிற வேலைவாய்ப்பும் கூட மிகப் பெரும் கேலிக் கூத்தாக இருக்கிறது. பொறியியல் மாணவர்கள், தொழிற்கல்வி மாணவர்கள் வேலையின்றி விரக்தியுடன் வீதிகளில் திரிந்து கொண்டிருக்கிறார்கள். வேறு வழியின்றி, பொறியாளர்கள் பலர் துப்புரவுப் பணிக்குக் கூட விண்ணப்பித்து இருக்கும் கொடுமையைக் காண்கிறோம். காண்ட்ராக்ட் மயமாக்கம், தனியார் மயமாக்கம் என்ற பெயரில், எந்த ஒரு சட்ட உரிமையும் இல்லாத மிகப்பெரும் இளம் உழைப்போர் பட்டாளம் உருவாகி இருக்கிறது. 5,000, 10,000 மாதச் சம்பளம் கூட கிடைக்காமல் பல மாணவர்கள் இளைஞர்கள் தமது எதிர்கால கனவு சூனியமாகிப் போனதாக உணர்கிறார்கள். இப்படிப்பட்ட, அவல நிலையைப் போக்கிடாமல், முதலாளிகளுக்கு மலிவான, திறன் வாய்ந்த உழைப்புச் சக்தி கிடைக்க வேண்டும் என்பதற்கு ஏற்ப கல்விக் கொள்கைகள், வேலைவாய்ப்பு கொள்கைகள் மாற்றியமைக்கப் படுகின்றன.

## தமிழகத்தில் தமிழர்களுக்கு மறுக்கப்படும் வேலைவாய்ப்பு

பிஜேபி தனது திட்டத்தை உள்நோக்கமாக கொண்டு, ஒன்றிய அரசு நிறுவன வேலை வாய்ப்பு கொள்கைகளை மாற்றி இருப்பதால், தமிழ் நாட்டில் செயல்படும் பல ஒன்றிய அரசு நிறுவங்களில், தமிழ் இளைஞர்களுக்கு வேலை மறுக்கப் படும் அவல நிலையைக் காண்கிறோம். தமிழ் நாட்டில் இருக்கும் ஒன்றிய அரசு நிறுவனங்களில் 90 சதவீத வேலைகள் தமிழர் களுக்கே கிடைக்கும் விதத்தில் வேலைவாய்ப்புக் கொள்கைகள் மாற்றியமைக்கப் பட வேண்டும்.

அது தவிர, தரமான வேலை, நியாயமான கூலி, தனியார்மய எதிர்ப்பு, இளைஞர்களுக்கு விளையாட்டு வசதிகள், நூலக வசதிகள், உள்ளிட்ட பல இளைஞர் சார் கோரிக்கைகளுக் காகவும் இளைஞர் கழகம் போராடும்.

## கடைச் சரக்காகிப் போன, அடிமைக் கல்வி முறை

கல்வி என்பது ஏழை எளிய மாணவர்களுக்கு எட்டாக்கனியாகிப் போய்விட்டது. கல்வி கடைச் சரக்காகிப் போய்விட்டது. சாதி வேறுபாடு பார்க்காத இளம் தலைமுறையினர் மத்தியில், கல்வி நிறுவங்களில் புதிய வகை ஏற்றத் தாழ்வுகளும் வேறுபாடுகளும் உருவாக்கப் படுகின்றன. மாணவர்களின் அனைத்தும் தழுவிய, அறிவார்ந்த வளர்ச்சிக்காகத் தான் கல்வி என்பது போய், எந்திரத்தில் எழுதி இருக்கும் ஆங்கில எழுத்துக்களைப் படிப்பதற்கு மட்டும் கற்றால் போதும் என கூறப்படுகிறது. இதன் மூலம், ஒரு புதிய வகை அடிமை வர்க்கம் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. அரசாளும் திறமைகள் கொண்ட ஒரு சிறிய, வசதி வாய்ந்த ஒரு பிரிவினர், தனியாக, அய் அய் டி களிலும், அய் அய் எம் களிலும் கற்ற ஒரு சிறிய பிரிவினர் மட்டும் சிந்தித்தால் போதும் என சொல்லப்படுகிறது. இப்படி ஒரு புதிய வகை ஏற்றத்தாழ்வு, புதிய வகை தரவரிசைப் படுத்தல், புதிய வகை வர்ணாசிரம முறை, கல்வி முறையில் ஏற்படுத்தப்படுகிறது. அதற்கேற்ப கல்வி முறைகள் மாற்றியமைக்கப் படுகின்றன. அதுதான் புதிய கல்விக் கொள்கை.

## இல்லம் தேடி கல்வி

## தனது கடமையை உதறித் தள்ளும் அரசு

இல்லம் தேடி கல்வி என்பது கல்வியைக் காவி மயமாக்குவது மட்டுமல்ல, முறைசார் கல்வி முறையை புறம் தள்ளி விட்டு முறைசாரா கல்வியைத் திணிப்பதற்கான முயற்சியும் ஆகும். அரசு தனது கடமையை உதறித் தள்ளும் போக்கின் ஒரு பகுதி ஆகும்.

## உழைப்புச் சந்தையும் மலிவான உழைப்பும்

நவதாராளவாத கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்படும் இயக்கப்போக்கில், லாப நோக்கம் என்பது முதன்மையானது. லாபத்தின் ஆதாரம் மலிவான உழைப்புச் சக்தி. எனவே, மலிவான உழைப்பு சக்தியை, உள்நாட்டு வெளிநாட்டு பெரு முதலாளிகளுக்காக உருவாக்கிக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டதுதான் புதிய கல்விக் கொள்கை. மோடி, தனது உரை ஒன்றில், நாட்டின் செல்வத்தை உருவாக்குகிறவர்கள் உழைப்போர் அல்ல, மூலதனம் போடுபவர் களே, அதனால், அவர்கள் எளிதாக தொழில் நடத்த தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கே அரசாங்கம் என மிகத் தெளிவாக சொல்லி இருக்கிறார். அதன் மூலம், தனது ஆட்சி, மக்களுக்கானது அல்ல, உழைப்போருக் கானது அல்ல, பெரும் பண முதலைகள், கார்ப்பரேட் முதலாளிகளுக்கானதே என பகிரங்கமாக அறிவித்து இருக்கிறார். தமிழகத்தில் ஆட்சி பீடம் ஏறியிருக்கும் திமுக அரசு எந்தப் பாதையில் செல்லும் என்பது கேள்விக் குறி. திமுகவின் கார்ப்பரேட் சார்பு நிலைப்பாடே இன்று வரை தூக்கலாகத் தெரிகிறது. கடந்த காலத்திலும் கூட கல்வியை வியாபாரம் ஆக்குவதில், தமிழகத்தை கல்வி வியாபாரத்தில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக ஆக்குவதில், மாறி மாறி அரசாண்ட தமிழக ஆட்சியாளர்கள் ஒரு மிகப்பெரும் பங்காற்றி இருக்கிறார்கள். நாம் எப்போதும் ஆட்சியா ளர்களின் கார்ப்பரேட் சார்பை எதிர்ப்போம். மக்கள் சார்பை வலியுறுத்துவோம்.

## தாய் மொழிக் கல்வி

## அதற்கு எதிராக

## மும்மொழிக் கொள்கை

தாய்மொழிக் கல்வி மட்டும் தான் மாணவர்களுக்கு சரியான கல்வியாக இருக்க முடியும். இன்றைக்கும் உலகத்தில் பாதிக்கும் மேற்பட்டோர் ஆங்கிலம் தெரியாத, தமது தாய்மொழி மட்டுமே கற்றவர்கள் இருக்கி றார்கள். ஆனாலும், அந்த நாடுகள் முன்னேறிக் கொண்டுதான் இருக்கின்றன. இந்தியா போன்ற நாடுகளில், பல்வேறு காரணங்களால், ஆங்கிலம் ஒரு தொடர்பு மொழியாக இருப்பது தவிர்க்க முடியாதது. அதுவும் குறிப்பாக, இந்தி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளை இதர தேசிய இனங்கள், கலாச்சாரங்களின் மீது திணிப்பதற் கான முயற்சி காணப்படும் போது அது எதிர்க்கப்பட வேண்டிய ஒன்றாக முன்வருகிறது. மொழி என்பது ஒரு கலாச்சாரம், ஒரு நாகரீகம், ஒரு தேசிய இனம் தொடர்புடையது மட்டுமல்ல, இந்தியா போன்ற நாடுகளில் அது ஒரு ஆதிக்கத்தின் சின்னமாக, கருவியாகத் திகழ்கிறது. எனவே, இந்தி சமஸ்கிருத திணிப்பு

என்பது வெறும் மொழித் திணிப்பு மட்டுமல்ல, அது ஒரு ஆதிக்கத் திணிப்பு ஆகும். மொழியின் பெயரால், கார்ப்பரேட் பெரு முதலாளிகளின் ஆதிக்கத்தை சாமான்ய மக்கள் மீது, தமிழ் மக்கள் மீது, உழைக்கும் மக்கள் மீது திணிப்பதற்கான முயற்சி ஆகும். எனவே, தமிழர் கலாச்சாரத்தை, தமிழ் மொழியை, தாய் மொழியைக் கட்டிக் காக்கும் கடமை மாணவர்கள் இளைஞர்கள் தோள்களில் சுமத்தப்பட்டு இருக்கிறது. அப்படி நாம் சொல்லும் போது, இதர மொழிகளை நாம் புறக்கணிக்கவில்லை. அதை யாரொருவரும் கற்றுக் கொள்வதற்கு நாம் எதிரானவர்களும் அல்ல. மாறாக, தாய்மொழி கல்விக்கு எதிராக பிறமொழி கல்வியைத் திணிக்கக் கூடாது என்றுதான் சொல்கிறோம்.

## எதிர்காலத்தை இருண்டதாக்கும் நீட்

நீட் தேர்வு என்பது கல்வியை உலகத் தரப் படுத்துதலுக்கான முயற்சி என சொல்லப் பட்டாலும் அது நாட்டின் பன்முகப்பட்ட தன்மைக்கு எதிரானதாக, தாய்மொழிக் கல்வியை மறுப்பதாக இருக்கிறது. நீட் தேர்வு நடத்தியே தீருவோம் என்கிற ஒன்றிய அரசின் ஆதிக்க மனோபான்மையால் நாம் தமிழகத்தில் எதிர் காலம் குறித்த கனவுகளோடு வலம் வந்த பல இளம் மாணவர்களை இழந்திருக்கிறோம். நீட் தேர்வை எதிர்ப்பது என்பது இளம் மாணவர்களின் எதிர்காலத்தோடு தொடர்பு டையது.

## புதிய கல்விக் கொள்கை

## மனு (அ)நீதி கொள்கை

புதிய கல்விக் கொள்கையின் மற்றொரு முக்கிய பிரச்சனை என்பது அது குலக்கல்வித் திட்டத்தை புதிய வடிவில் கொண்டுவர எத்தனிக்கிறது என்பது. செருப்பு தைக்கும் தொழிலாளியின் மகன் செருப்பையே தைக்க வேண்டும், முடி திருத்துபவரின் மக்கள் முடியையே திருத்த வேண்டும் என்பது சமூக நீதிக்கு எதிரானது ஆகும். குரு-சிஷ்யர் முறையை கல்வியில் புகுத்தும் முயற்சியும் மிக கடுமையாக எதிர்க்கப்பட வேண்டிய ஒன்று. எனவே, புதிய கல்விக் கொள்கை என்பது மனு (அ)நீதியை நிறுவனமயமாக்கும் ஒரு முயற்சி ஆகும்.

## மனப்பாட தேர்வு முறைக்கு எதிராக

அறிவார்ந்த வளர்ச்சிக்கான கல்வி முறைக்காக

நமது கல்வி முறை என்பது அனைத்தும் தழுவிய அறிவார்ந்த வளர்ச்சிக்கான கல்வி என்பதிலிருந்து மனப்பாட கல்விமுறை, தேர்வு முறை என்பதாக மாறிப் போயிருக்கிறது. இதனை அறிவார்ந்த கல்வியாக, முற்போக்கு கல்வியாக மாற்றியமைத்திட வேண்டிய தேவை இருக்கிறது. கல்வித் திட்டத்தில் சாதி ஒழிப்பு, பால் சமத்துவ, பால் கூருணர்வு கல்வி தேவைப் படுகிறது. பெண்களின் அச்சமற்ற சுதந்தரத்தை உறுதி செய்வதாக கல்விக் கூடங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதே போல, கல்வித் திட்டத்தை, பாடப் புத்தகங்களை காவி மயமாக்கும் முயற்சிகளையும் காண்கிறோம். காந்தி நாட்டு விரோதியாகவும் கோட்சேவை நாட்டுப் பற்றாளனகவும் சித்தரிக்கும் முயற்சிகள் தெட்டத்தெளிவாகவே முன்வந்துள்ளன. இவற்றை எதிர்த்துப் போராடி, உண்மையை, முற்போக்கு விழுமியங்களை மீட்டெடுப்பது மாணவர்களின் தலையாய கடமையாக முன் வந்திருக்கிறது.

## கோரிக்கைகள் முழக்கங்கள்

எனவே, பின் வருமாறு நமது கோரிக்கை முழக்கங்கள் இருக்கும்.

- ◆ இளைஞர்–மாணவர் இயக்கம்
- ◆ அது ஒரு அரசியல் கலாச்சார இயக்கம்!
- ◆ பண்டைப் பழக்க வழக்கங்களை விரட்டி அடிப்போம்!
- ◆ முற்போக்கு கலாச்சார மாண்புகளை உயர்த்திப் பிடிப்போம்!
- ◆ வேலை கல்வி எமது உரிமை
- ◆ வேலை தருவது அரசின் கடமை!
- ◆ அறிவார்ந்த கல்வி தருவதும் அரசின் கடமை!
- ◆ புரட்சிகர மாணவர் –இளைஞர் இயக்கம் கட்டுவோம்!
- ◆ புதியதோர் தமிழகம் படைப்போம்!
- ◆ கல்வியைக் கடைச் சரக்காக்குவதை எதிர்த்திடுவோம்!
- ◆ ஒரு ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ கல்விக்காகப் போராடுவோம்!
- ◆ தாய் மொழிக் கல்வி, தரமான வேலை எமது கோரிக்கை!
- ◆ நீட் தேர்வை, மும்மொழிக் கொள்கையை எதிர்த்திடுவோம்!
- ◆ குலக்கல்வி, அடிமைக் கல்வி முறையை புறக்கணிப்போம்!

◆ புதிய கல்விக் கொள்கை அது புதிய அடிமைக் கொள்கை அது ஒரு மனு (அ)நீதிக் கொள்கை

◆ கல்வி முறையில் வலதுசாரி வர்ணசிரம கொள்கையைப் புகுத்தாதே!

◆ வளாகப் போராட்டங்களைக் கட்டமைப்போம்!

◆ கல்வியைக் கடைச் சரக்கு ஆக்காதே!

◆ கல்வியைக் காவிமயமாக்காதே!

◆ அனைவருக்கும் இலவச கல்வி!

◆ அனைவருக்கும் வேலை!

◆ மனப்பாட தேர்வு முறைக்கு எதிராக

◆ அறிவார்ந்த வளர்ச்சிக்கான கல்வி முறைக்காக

**உடனடி கோரிக்கைகள் சில...**

- *புதிய அடிமைக் கல்விக் கொள்கையை திரும்பப் பெறு!*
- *ஆண்டுக்கு ஒரு கோடி பேருக்கு வேலை வழங்கு!*
- *தரமான வேலை, நியாயமான சம்பளம் வழங்கு!*
- *வேலை கிடைக்கும் வரை மாதம் ரூ 10,000 நிவாரணம் வழங்கு!*
- *கிராமத்துக்கு, நகர் வார்டுக்கு ஒரு நூலகம், விளையாட்டு மைதானம், உடற்பயிற்சிக் கூடம் அமைத்திடு!*
- *வீர விளையாட்டுக்களை ஊக்குவித்திடு!*
- *நீட் தேர்வை ரத்து செய்!*
- *இட ஒதுக்கீட்டை முழுமையாக, அனைத்து மட்டங்களிலும் நடைமுறைப் படுத்து!*
- *இல்லம் தேடி கல்வித் திட்டத்தை ரத்து செய்!*
- *அரசுக் கல்லூரிகள், பள்ளிகளைத் திறந்திடு!*
- *அனைவருக்கும் சமமான கல்வி வழங்கு!*
- *கல்வித் திட்டத்தில் சாதி ஒழிப்பு, பால் சமத்துவ, பால் கூருணர்வு கல்வி அறிமுகப் படுத்து!*
- *பெண்களின் அச்சமற்ற சுதந்தரத்தை உறுதி செய்வதாக கல்வி கூடங்களை மாற்றியமைத்திடு!*
- *கல்வி தனியார்மயமாக்கத்தை நிறுத்து!*
- *அந்நிய கல்வி நிறுவனங்களுக்கு தமிழகத்தில் கடைவிரிக்க அனுமதி வழங்காதே!*
- *பிஜேபியின் புதிய கல்விக் கொள்கையை திரும்ப் பெற சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்று!*
- *கல்விக் கட்டணத்தை உயர்த்தாதே!*
- *தனியார் கல்வி நிருவன கட்டணக் கொள்ளையைத் தடுத்து நிறுத்து!*
- *கல்வியைக் காவி மயமாக்காதே!*
- *வரலாற்றுப் பாடங்களைத் உண்மைக்குப் புறம்பாக திரிக்காதே!* ❑

# விவசாயிகள் பிரச்சனை: ஒரு புதிய அனுபவம்

கள்ளக்குரிச்சி மாவட்டம், திருநாவலூர் ஒன்றியத்திலுள்ள சேந்தநாடு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் பெரும் ஊழல், முறைகேட்டில் சிக்கிக் கிடக்கிறது. 17 கிராமங் களில் உள்ள விவசாயிகளுக்கு இந்த கூட்டுறவு கடன் சங்கம் கடன் வழங்க வேண்டும். இந்த கடன் சங்கத்தில் கடன் கேட்டு விண்ணப்பித் திருந்த அகில இந்திய விவசாயிகள் மகா சபையின் மாவட்டச்செயலாளர் ஆறுமுகம், மாவட்டத் தலைவர் வீரன், அவிகிதொச மாவட்டச் செயலாளர் ஏழுமலை ஆகியோருக்கு தகுதி இருந்தும் கடன் வழங்க சங்கத்தலைவர் மறுத்துவந்தார். இதுபோல் தகுதியுள்ள ஏராளமான விவசாயிகளுக்கும் கடன் மறுக்கப்பட்டு வந்தது தெரிய வந்தது. விவசாயிகள் பலரிடம் விசாரித்த போது பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளிவந்தன.

700 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சங்கத்தில் இதுவரை 350 விவசாயிகளுக்கு ரூபாய் 3.5 கோடி வரை பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ள தாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இந்த கூட்டுறவு சங்கத்தின் தலைவராக 10 ஆண்டுகளுக்கு மேலாக தலைவர் பொறுப்பில் இருந்து வரும் அதிமுகவைச் சேர்ந்த கோவிந்தராஜ் தனக்கு வேண்டியவர்கள், தன் கட்சிக்காரர்க ளுக்கு விதிகளுக்கு புறம்பாக கடன் வழங்குவது வாடிக்கை என்று விவசாயி கள் கூறுகின்றனர். அரசியல் செல்வாக்கும் நூற்றுக்கணக்கான



ஏக்கரில் முந்திரிக் காடுகளை வைத்தி ருப்பவர் களுமான ஒரு சிலருக்கு கோடிக்கணக்கில் கடன் கொடுத்திருப்பதாகவும் சொல்கிறார்கள்.

இவ்வாறு பல புகார்கள் வந்தநிலையில் இந்த முறைகேடுகளைக் கண்டித்து 1.11.2021 அன்று சேந்தநாட்டில் உண்ணாநிலைப் போராட்டத்தை அகில இந்திய விவசாயிகள் மகாசபை அறிவித்தது. அந்த கடன் சங்கத்தில் நடக்கும் மேற்சொன்ன ஊழல், முறைகேடுகளை பட்டியலிட்டு துண்டறிக்கை வெளியிட்டு விவசாயிகள் மத்தியில் விநியோகிக்கப் பட்டது. விவசாயிகள் மத்தியில் இந்தப் பிரச்சனை பேசுபொருளானது. உடனடியாக உளுந்தூர் பேட்டை வட்டாட்சியர் அமைதிப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்தார். 3.10.2021 அன்று நடந்த பேச்சுவார்த்தையில் இகக (மாலெ) மாவட்டச் செயலாளர் கலியமூர்த்தி, விவசாயிகள் மகாசபை மாவட்டச் செயலாளர் ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கடன் சங்கத்தின் செயலாளர் சண்முகமும் கலந்து கொண்டார். மகாசபை யிலுள்ள தகுதியான விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படும், விவசாயிகள் சொல்லும் முறை கேடுகள் இனி நடக்காது என்று வாக்குறுதி யளித்ததை அடுத்து அமைதிக்கூட்டம் சுமூகமாக முடிந்ததாக வட்டாட்சியர் அறிவித்தார். வட்டாட்சியர் கேட்டுக்கொண்டபடி போராட்டம் ஒத்திவைக்கப் பட்டது. வட்டாட்சியர் அளித்த அறிக்கையின்படி அந்த கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் சண்முகத்தை இடமாற்றம் செய்யும் உத்தரவு வந்தது. ஆனால், சட்டப்பேரவை உறுப்பினர் தலையீட்டால் அவரது மாறுதல் ரத்து செய்யப்பட்டது.

மேலும் வாக்களித்தபடி கடன் வழங்காமல் கடன் சங்க நிர்வாகிகள் இழுத்தடித்தனர். இதனால் 19.11.2021 அன்று மீண்டும் போராட்ட அறிவிப்பு செய்யப்பட்டது. இதற்கிடையில், மகாசபை நிர்வாகிகள், விழுப்புரத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளரை சந்தித்து புகார் மனு (15.11.2021) அளித்தனர். சேந்தநாடு கூட்டுறவு சங்கத்துக்கு 17.11.2021 அன்று நேரடி விசாரணைக்கு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நேரடி விசாரணையை காண்பதற்காக அஇவிமச, இகக(மாலெ) தலைவர்கள்,ஊழியர்கள் கூட்டுறவு சங்க அலுவலகத்திற்கு சென்றிருந்தனர். அதிகாரிகள் வருவதற்கு காலதாமதமாகிக் கொண்டிருந்தது. ஆவேசமடைந்தவர்கள் முழக்கம் எழுப்பினார்கள். அலுவலகத்திற்கு வந்திருந்த விவசாயிகள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் திரண்டுவிட்டனர். அதிகாரிகளிடம் (இணைப்பதிவாளர் பெண் அதிகாரி) கூட்டுறவுசங்க முறைகேடுகள் குறித்து அஇவிமச செயலாளர் ஆறுமுகம், இகக (மாலெ) மாவட்டச் செயலாளர் கலியமூர்த்தி இருவரும் விளக்கியதோடு கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை, வரவுசெலவு விவரங்களையும் கேட்டனர். தலித் விவசாயிகள் அவமதிக்கப் படுவதாகவும் அவர்களுக்கு கடன் மறுக்கப்படு வதாகவும் புகார் கூறினர். அதோடு தலைவர், செயலாளர் உள்ளிட்டோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

சில விவரங்களை தெரிவித்த இணைப் பதிவாளர், சங்கத்தின் கோரிக்கையின்படி புதிதாக 106 பேர்களுக்கு கடன் வழங்கப்பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். கடன் சங்க பதிவேடுகள் பரிசீலிக்கப்படுவதாகவும் உரிய விசாரணை மேற்கோள்ளப்படுமென்றும் தெரிவித்தார். மட்டுமின்றி கடன் சங்க செயலாளர் சண்முகத்தை (ஓய்வுபெறும் காலம் ஓராண்டு மட்டுமே இருக்கும் போது ஒழுங்கு நடவடிக்கை

எடுக்கக் கூடாது என்ற புதிய உத்தரவின் காரணமாக) விடுப்பில் செல்லுமாறு அறிவுறுத்தினார். புதிய செயலாளராக சீனிவாச ராகவன் என்பவர் நியமிக்கப்படுவதாகவும் அறிவித்தார். இது கூடியிருந்த விவசாயிகளி டையே பெருத்த உற்சாகத்தையும் வரவேற்பை யும் பெற்றது. பல கிராமங்களுக்கும் செய்தி பரவியது.

106 பேர்களுக்கு புதிதாக கடன் வழங்கப் படும் என்று அறிவித்திருந்தாலும் 94 பேர்களுக்கு மட்டும் கடன் அனுமதிக்கப்பட்டு வங்கிக் கணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டது. இதில் அஇவிமச, இகக(மாலெ) நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் (ஏக்கருக்கு ரூ.27,000 வீதம்) கடன் கிடைத்துள்ளது. சில சில்லரை காரணங் களை காட்டி அஇவிமச மாவட்டத் தலைவர் வீரனுக்கு கடன் வழங்கப்படவில்லை. இது நமது அமைப்புக்குள் முரண்பாடுகளை உருவாக்கும் முயற்சியுமாகும். நமது தரப்பிலிருந்து எதிர்ப்பு தெரிவித்தவுடன், அடுத்த தவணையில் வழங்கப்படுமென உறுதி அளித்துள்ளனர்.

1. போராட்டத்தின் மூலம் கடன் பெற முடியும் என்ற நம்பிக்கை விவசாயகளிடையே ஏற்பட்டுள்ளது. அஇவிமசவும் இகக(மாலெ) வும் பரவலாக அறிமுகமாகியுள்ளது.

2. இந்த போராட்ட நடவடிக்கை மூலம் பல கோடிகள் புரளும் இந்த வேளாண் கூட்டுறவு சங்கத்தை கட்டுப்படுத்தும் சக்திகள் அடை யாளம் காணப்பட்டுள்ளன. எதிரெதிர் முகாமான திமுக, அதிமுக வைச் சேர்ந்தவர்கள் கரம் கோர்த்து நிற்பதையும் காணமுடிகிறது. ஒவ்வொரு கூட்டுறவு கடன் சங்கமும் ஒரு அதிகார மய்யமாக இருப்பதும் தெரிய வருகிறது.

3. வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை ஜனநாயக ரீதியாக செயல்பட வைப்பதற்கான நடவடிக்கை பரந்த விவசாயிகளை அணிதிரட்டு வதற்கான பெரும் வாய்ப்பு கொண்ட அரங்கமாக இருக்கும். அதேசமயம் உக்கிரமான போராட்டத்துக்கான களமாகவும் இருக்கும்.

4. போராட்ட அறிவிப்பைக் கண்ட உடனேயே பேச்சு வார்த்தை, உடன்பாடு என வந்திருப்பதற்கான காரணம், புரையோடிப் போயிருக்கும் ஊழல், முறைகேடுகளுமாகும். அதேசமயம் உடனடி உடன்பாடு காண்பதன் மூலம் போராட்ட சக்திகளின் கைகளை கட்டிப் போடுவதற்கான முயற்சியுமாகும்.

5. தலித் விவசாயிகள் கணிசமாக இருக்கும் இந்த பகுதியில் இந்தப்பிரச்சனையில் நம்முடன் கூட்டுநடவடிக்கைக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி முன்வந்துள்ளது. திமுகவைச் சேர்ந்த தலித் விவசாயிகள் தங்களுக்கு கடன் வழங்கப்படாதது குறித்து தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரிடம் புகார் செய்துள்ளனர். எம் எல் கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சி பற்றியும் சுட்டிக் காட்டி யுள்ளனர்.

6. ஊழல் புகாரில் சிக்கியுள்ள கடன் சங்க பொறுப்பாளர்களும் தகுதிக்கு மீறி பலன்பெற்ற அரசியல் பிரமுகர்களும் அரசியல் தொடர்புகள் சட்ட மன்ற உறுப்பினர், அமைச்சர் மூலம் பிரச்சனையை மூடிமறைக்க முயன்று வருகின்ற னர்.

7. இந்தப் பிரச்சனை நமது ஆய்வு, படிப்புக்கும் மறுசீரமைப்பு இயக்கம் சொல்லி யுள்ளவாறு புதிய பிரிவினர் மத்தியில் செல்வதற்கு வாய்ப்புகளை திறந்திருக்கிறது.

8. போராட்ட அறிவிப்பு, பேச்சுவார்த்தை யோடு விவசாயிகளை அணிதிரட்டும் வேலைக்கு கவனம் செலுத்திட வேண்டும். வட்டார அளவில் இதுபோன்ற குறிப்பான பிரச்சனைகளில் கிளர்ச்சி, போராட்டங்கள் மூலமே அவிமச வுக்கு உருவம் கொடுக்க முடியும்.

சேந்தநாடு கூட்டுறவு கடன் சங்கத்துக் குட்பட்ட கிராமங்களில் தலித், தலித் அல்லாத விவசாயிகள் மத்தியில் பிரச்சாரம் செய்து விவசாயிகள் மகாசபையில் விவசாயிகளை உறுப் பினர்களாக்கவும் திட்டமுள்ளது; போராட்டம் தொடர்கிறது.

**- டி. கலியமூர்த்தி, சி. கொளஞ்சிநாதன்**



# அரக்கத்தனமான மோடி ஆட்சியை எதிர்த்து இந்திய விவசாயிகளும் அந்தோலன் ஜீவிகளும் (உயிர் வாழப் போராடுபவர்கள்) பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றி

*பரவலாக எதிர்க்கப்பட்ட வேளாண் அவசர சட்டத்தை மோடி அரசாங்கம் மசோதாவாக மாற்றி, பின்பு நாடாளுமன்றத்தின் எதிர்ப்புகளை சுக்குநூறாக்கி சட்டமாக மாற்றி 14 மாதங்களுக்குப் பிறகு, இதுவரை கண்டிராத விவசாயிகளின் எதிர்ப்பியக்கத்துக்கு பிரதம மந்திரி தலை பணிந்து, பிரச்சினைக்குரிய 3 வேளாண் சட்டங்களையும் நீக்கி விடுவதாக அறிவித்திருக்கிறார். துணிச்சல் மிக்க, விடாப்பிடியான மக்களின் இயக்கம் கொடுங்கோன்மை ஆட்சியை மண்டியிடச் செய்திருக்கிறது. அரசு அதிகாரத்தின், ஆளும் மேட்டுக்குடியின் அராஜகத்தையும் மிருகத்தனத்தையும் மக்களின் சக்தி அடிபணிய வைத்த அந்த தருணம் வரலாற்று நிகழ்வாக என்றென்றும் நினைவில் கொள்ளப்படும். நரேந்திர மோடி, பின்னோக்கி திரும்பும் (U turn) இந்த அறிவிப்பை வெளியிட சீக்கிய மத ஸ்தாபகர் குருநானக் பிறந்த தினத்தை தேர்ந்தெடுத்திருந்தார். கோபமடைந்திருக்கும் சீக்கிய சமூகத்தினரை சமாதானப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டும் வரவிருக்கும் உத்தர பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப் சட்டமன்றத் தேர்தல்களில் அதிக இழப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்ற ஐயப்பாட்டை கணக்கில் கொண்டும் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது என்பது வெள்ளிடை மலை.*

மோடியின் ஊடக செல்லப் பிள்ளைகளாக இருந்து எல்லா நேரத்திலும் வேளாண் சட்டங்களை உற்சாகமாக வரவேற்ற நிகழ்ச்சி தொகுப்பாளர்கள், கருத்தாளர்கள் இப்போது தார்மீக நெறியிழந்து, மிகவும் குழப்பமுற்று காணப்படுகின்றனர். சிலர் இந்த அரசாங்கம் மற்ற பிரச்சனைகளான குடியுரிமை திருத்த சட்டம், அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 370 ஆகிய வற்றிலும் கூட வளைந்து கொடுக்குமோ என ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிலர் இதை ராஜதந்திரியின் புத்திசாலித்தனம் என அழைக்கிறார்கள். இன்னும் சிலர் இதை தேச நலனில் இருந்து உந்தித்தள்ளப் பட்டதாக சொல்கிறார்கள். வேறு சிலரோ காலதாமதமான இந்த அறிவிப்பை சிறந்த தேர்தல் வியூக நெத்தியடி என்பதாக காண்கிறார்கள். ஒரு செல்ல ஊடகத்தின் மேலாளர் இந்த பின்வாங்குதலை, சிங்கம் காலை இரண்டடி பின்னே நகர்த்தி வைப்பது என்பது தன் இரையின் மீது கவ்வி பாய தயாராக இருப்பது தானே தவிர, விட்டு விட்டு ஓடுவதற்கு அல்ல என்று சொல்லி ஒப்பிடுகிறார்.

மோடியின் இந்தத் தேர்தல் வியூக நெத்தியடி பாஜகவின் இழப்புகளை எந்த அளவு குறைக்கும் என்பதையும் எந்த அளவு துல்லியமாக விவசாயிகள் மீது அதன் தாக்கம் இருக்கும் என்பதையும் காலம்தான் சொல்ல வேண்டும். விவசாயிகளை அரக்கர்களாக காண்பித்து அவர்கள் இயக்கத்தை நசுக்க, பிளவுபடுத்த, அதன் தார்மீகத்தை இழக்கச் செய்ய, மதிப்பிழக்க வைக்க எல்லா தந்திரங்களையும் கையாண்டு முயற்சித்த பின்பும் அரசாங்கம் தோல்வி கண்டது என்ற உண்மை மட்டும் வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது. உண்மையிலேயே விரக்தியுற்ற, நம்பிக்கையற்ற, பீதியில் இருக்கும் இந்த அரசாங்கம்தான் வேளாண் சட்டங்களை நீக்குவதாக அறிவித்துள்ளது. போராட்டக் களத்திலிருக்கும் விவசாயிகளும் நீதி, ஜனநாயக, மக்கள் உரிமைக்காக போராடக்கூடிய இதர சக்திகளும் இந்தத் தருணத்தை கைப்பற்றி இன்னும் பெரிய வெற்றிகளை நோக்கி முன் தள்ள வேண்டும்.

இந்த மிகப்பெரிய வெற்றியை சாத்தியமாக்கியது எது? இந்திய அரசும் சக்திமிக்க அரசாங்கங்களும் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குப் பிறகு இந்தியாவின் விவசாயிகளை பகைத்துக் கொள்ள முடியாது, புறக்கணிக்க முடியாது என்பது மீண்டும் நிரூபணமாகி உள்ளது. இந்தியாவின் சுதந்திரப் போராட்ட இயக்கம் மாபெரும் விவசாயிகளின் எழுச்சி, கலகத்தால்

குறிக்கப்பட்டிருக்கிறதாகும். இந்திய விவசாயிகளின் துடிப்புமிக்க பங்களிப்பால் சுதந்திரப் போராட்ட இயக்கம் தாக்குப் பிடித்து நிற்க வைக்கப்பட்டு, இறுதியில் காலனிய ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரவும் காரணமாக இருந்தது.1947க்கு பிறகு நடைபெற்ற ஒவ்வொரு சமூக, அரசியல் கொந்தளிப்பிலும் விவசாயிகளும் இளைஞர்களும் முன்னணி பாத்திரம் வகித்தனர். கடந்த 30 ஆண்டுகளிலும் கூட இந்துத்துவ அரசியலும் சந்தை ஆளுமையின் பொருளாதாரமும் உலகமயமும் பொதுவாக வளர்ச்சி முகத்தில் இருந்த போதும் விவசாயிகள் இயக்கம் பல சந்தர்ப்பங்களில் அந்த கட்டுகளை உடைத்திருக்கிறது.

1894 நில ஆர்ஜித சட்டத்தை சிறப்பு பொருளாதார மண்டல எதிர்ப்பு போராட்டம் முடிவுக்கு கொண்டு வந்தது. கார்ப்பரேட் நலனை அடிப்படையாகக் கொண்ட நில கையகப் படுத்தல் மற்றும் இழப்பீடு சட்டம் 2013 ஐ மோடி சீர்குலைக்க முயற்சித்தபோது விவசாயிகளும் பழங்குடியினரும் அதை வெற்றிகரமாக முறியடித்தார்கள். மோடியின் 7 ஆண்டு கால ஆட்சியில் இரண்டாவது முறையாக அரசாங்கத்தை விவசாயிகள் பின்னுக்கு தள்ளியிருக்கிறார்கள். நாடுமுழுவதுமுள்ள நூற்றுக்கணக்கான விவசாய சங்கங்களை செயல்பாட்டின் அடிப்படையில் ஒன்று திரட்டி, அந்த ஒற்றுமையை தக்கவைத்து, பிரித்தாளும் சங்பரிவாரின் மதவாத பிரச்சாரத்தை புறக்கணித்து விவசாயிகள் இயக்கம் இந்த வெற்றியை ஈட்டியிருக்கிறது. பஞ்சாப் விவசாயிகளை காலிஸ்தானிகள் என்று முத்திரை குத்தி குறிவைத்து தனிமைப்படுத்த நினைத்த போது, ஹரியானா விவசாயிகள் அவர்களோடு இணைந்து நின்று நவம்பர் 26 அன்று டெல்லி எல்லைப்பகுதியில் கூடாரங்களை அமைத்தார்கள். ஜனவரி 26 (குடியரசு தினத்தன்று) தவறுதலாக வழி நடத்திய ஊடக பிரச்சாரம், ஒடுக்குமுறைக்கு பிறகு மேற்கு உத்தரபிரதேச விவசாயிகள், இயக்கத்திற்கு புதிய காற்றையும் வலிமையையும் கொடுத்தார்கள். லக்கிம்பூர் கேரி விவசாயிகள் படுகொலைக்குப் பிறகு மொத்த நாடும் ஒன்றுபட்டு எழுந்தது.

அரசாங்கமும் சங்படையும் ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, சதித்திட்டங்கள் தீட்டி, போராடும் விவசாயிகளை அரக்கர்களாக காட்டி இயக்கத்தை நசுக்க எந்த அளவு முயற்சித்தார்களோ அந்த அளவு விவசாயிகளின் ஒற்றுமையும் நெஞ்சுரமும் எஃகு போல் புடம் போடப்பட்டது. விடாப்பிடியான, தீர்மானகரமான விவசாயிகளின் போராட்டங்கள், மற்ற உழைக்கும் மக்கள் பிரிவினரின் பெருகி வரும் அனுதாபத்தைப் பெற்றது. நவம்பர் 2 ,அன்று அறிவிக்கப்பட்ட இடைத்தேர்தல் முடிவுகள் மக்களின் கோபாவேசம் தேர்தல் களத்திற்கு சென்று விட்டதை தெள்ளத்தெளிவாக காட்டியது. எதிர்க்கட்சிகள் பிளவு பட்டும் வலுவிழந்தும் இருந்த நேரத்தில் விவசாயிகளின் ஒன்றுபட்ட இயக்கம் களத்தில் வளர்ந்துவரும் எதிரணியாக எழுந்து வந்தது. எதிரணி அரசியல் கட்சிகளிலிருந்து சுதந்திரமாக தன்னை இருத்திக் கொண்ட அதேவேளை, விவசாயிகளின் ஒன்றுபட்ட மேடை, பாஜகவுக்கு எதிரான துணிச்சலான நிலைப்பாட்டை எடுத்தது. பாஜகவின் தேர்தல் தோல்வியை உத்தரவாதம் செய்ய எல்லா இடங்களிலும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. பரந்த ஒற்றுமை மற்றும் துணிச்சலான அரசியல் குரல் என்ற விவசாயிகள் இயக்கத்தின் இந்த இரண்டின் சேர்க்கை வேறுவழியில்லாமல் ஒட்டுமொத்தமாக சட்டங்களை நீக்க வேண்டிய நிலைக்கு மோடி அரசாங்கத்தை தள்ளியது.

இந்தப் போராட்ட காலகட்டத்தில் 700க்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிரிழக்க நேரிட்டது குறித்து விவசாயிகளிடம் மோடி மன்னிப்பு கோரவில்லை.சிலர் நேரடியாக மோடியின் கட்சி, அதன் அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை மற்றும் ஒடுக்குமுறை காரணமாகவும் மற்றும் சிலர் திறந்த வெளியில் மோசமான தட்பவெப்ப நிலையில் நீண்ட நாட்கள் இருக்கும்படி தள்ளப்பட்டதன் காரணமாகவும் உயிரிழந்திருக்கின்றனர். விவசாயிகள் மீதும் விவசாயிகள் இயக்கத்தின் மீதும் அவருடைய அமைச்சர்கள், கட்சியின் மூத்த தலைவர்கள் வசைபாடியதற்காகவோ அல்லது விவசாயிகளை ஆதரிக்கும் செயல் வீரர்களை குறிவைத்து நாடாளுமன்றத்தில் அவமதிப்புக்குறிய 'அந்தோலன் ஜீவி' என்ற சொல்லாடலை தான் குறிப்பிட்டது பற்றியோ அவர் எந்த வருத்தமும் தெரிவிக்கவில்லை. மாறாக, அவர் வேளாண் சட்டம் வழங்கப் போவதாக இருந்த பயன்கள் பற்றி ஒரு பிரிவு விவசாயிகளை தன்னால் இணங்க வைக்க முடியவில்லை என்பதற்காக நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார். டீசல் மற்றும் உர விலை கட்டுக்கடங்காமல் உயர்ந்து வருவதாகவும் சாகுபடிக்கான விலை உயர ஏறி வருவதை குறைப்பது குறித்தும் அவர் எதுவும் பேசவில்லை. அதற்கு மாறாக, அவர் பூஜ்ஜிய

பட்ஜெட்டில் விவசாயம் செய்வது குறித்தும் புதிய சட்டங்களை வடிவமைக்க புதிய குழு உருவாக்கப்படுவது குறித்தும் பேசியுள்ளார்.

சட்டங்கள் உண்மையிலேயே திரும்பப் பெறப்படும் வரையும் எல்லா விளை பொருட்களுக்கும் குறைந்த பட்ச ஆதார விலைக்கு சட்டபூர்வ உத்தரவாதம், மின்சார மசோதாவை திரும்பப் பெறுதல் உட்பட இயக்கத்தின் மற்ற கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் வரையிலும் போராட்டத்தைத் தொடர்வது என விவசாயிகள் சரியாகவே முடிவு செய்துள்ளார்கள். மோடியின் புதிய நெத்தியடி நடவடிக்கை, பெருந்தன்மை குறித்து அவரது செல்ல ஊடகங்கள் மாயைகளை பரப்பட்டும். பெரும் தொற்று காலத்திற்கு நடுவே சக்தி வாய்ந்த இயக்கத்தை கட்டி எழுப்பி தொடர்ந்து எடுத்துச் சென்றதற்கும் பாசிச ஆட்சியின் அராஜகம், ஒடுக்குமுறையை சந்தித்து போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் சென்றதற்கும் இந்தியா விவசாயிகளுக்கு வணக்கம் செலுத்தும். நடைபெறும் ஒவ்வொரு மக்கள் இயக்கமும் விவசாயிகளிடமிருந்து உத்வேகத்தையும் துணிவையும் பெற்றுக் கொண்டு மோடி–ஷா–யோகி ஆட்சியின் பாசிச திட்டத்தை முறியடிக்க சக்திவாய்ந்த எதிர் தாக்குதலை தொடுக்க வேண்டிய நேரம் இது.

‘லிபரேஷன்’ டிசம்பர் 2021

**தமிழாக்கம் – தேசிகன்**

# பருவகால அவசர நிலையை, உலகத் தலைவர்கள் புறக்கணித்ததால் சிஒபி 26 ஏமாற்றத்தில் முடிந்தது

உலக வெப்பநிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியஸ் வரை மட்டுப்படுத்தலாமென, கிளாஸ்கோ நகரில் நடந்த COP 26 உச்சி மாநாடு நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால், வளர்ச்சிக்கான இலக்குகளையும் பருவநிலைப் பேரழிவின் விளைவுகளையும் சமப்படுத்தத் தவறிய நாடுகளால் அது தோல்வியடைந்தது.

COP 26 என்று சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட, 2021 க்கான பருவநிலை மாற்றம் பற்றிய ஐக்கிய நாடுகளின் மாநாடு, அக்டோபர் 31 முதல் நவம்பர் 12 வரை, கிளாஸ்கோ நகரில் நடைபெற்றது. உலகளாவிய வெப்பநிலை உயர்வை, தொழிற்புரட்சி காலத்திற்கு முந்தைய அளவுக்கு அதிகமாக 1.5 டிகிரி செல்சியஸ்க்குள் மட்டுப்படுத்துவதை உறுதி செய்வதே இந்த உச்சி மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

இந்தக் குறிப்பிட்ட அளவில் இருந்து வெப்பநிலை எந்த அளவு உயர்ந்தாலும், அது உலகத்தை நாசமாக்கும் பேரழிவு மிக்க பருவநிலை மாற்றத்திற்கு இட்டுச்செல்லும் என்பதே அறிவியலாளர்களின் ஒன்றுபட்ட கருத்தாகும். பருவநிலை மாற்றத்தில் திரும்ப இயலாத இடத்தை நோக்கி நாம் மிக விரைவாக சென்று கொண்டிருக்கிறோம். எனவே, 'மனித இனத்திற்கான கடைசி மற்றும் சிறந்த நம்பிக்கை' என இந்த COP 26க்கு முத்திரை இடப்பட்டது. மேடையில் கூடியிருந்த உலகத் தலைவர்கள், அவர்களிடம் எதிர்பார்த்ததற்கு தகுந்தவாறு நடந்து கொள்வதிலிருந்து தவறிவிட்டனர் என்பது மாநாடு முடிவுக்கு வரும் சமயத்தில் தெளிவானது.

வட அரைக்கோளத்தினை குளிர்காலம் நெருங்கி வரும்போது, இந்த உலகம் ஒரு ஆற்றல் நெருக்கடியை எதிர்கொள்கிறது. இந்த நேரத்தில், மாநாட்டில் பங்கு கொண்டிருந்த நாடுகள், குறுகியகாலச் சிரமங்களைத் தாண்டி, நீண்டகால இலக்குகள் மீதான உண்மையான உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவது தேவையாக இருந்தது. ஆஸ்திரேலியாவுடனான சீனாவின் வர்த்தகப் போர் காரணமாக, நிலக்கரிக்கான நெருக்கடி உருவானது. அதே நேரத்தில், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து, பிரிட்டன் மின்சாரத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளது. இந்தத் தட்டுப்பாட்டின் காரணமாக, உலகம் முழுவதிலும் நிலக்கரியின் விலை உயர்ந்தது. இந்தியாவின் மின் உற்பத்தி நிலையங்களில் உள்ள நிலக்கரிக் கையிருப்பு குறைந்து வருவதால், மின்தடையை எதிர்கொள்ளும் நிலையில் இந்தியாவும் கூட உள்ளது. புதை படிம எரிமங்களின் (fossil fuel) வர்த்தக பயனாளர்கள், அதன் அதிகப்படியான பயன்பாட்டிற்கு அழுத்தம் கொடுக்க, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதே

நேரத்தில், நம்முடைய ஆற்றல் தேவைகளுக்கான நிலையான, நம்பகமான மூல வளமாக அடிப்படையில் நிலக்கரி இருக்க முடியாதென இந்த நெருக்கடி வெளிப்படுத்தியுள்ளது.

'சுற்றுச்சூழல் மீதான மானுடத் தாக்கங்கள் பருவநிலையில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்கள்' குறித்து பெருமளவு அறிவியல் சான்றுகள்உள்ளன. இருந்தபோதிலும், முதலாளித்துவ வட்டாரங்கள், இதுகுறித்து அதிகரித்த சந்தேகத்துடன் அணுகுவது ஒரு வளர்ந்து வரும் போக்காக உள்ளது. இந்த வட்டாரங்களில், டோனால்ட் டிரம்ப் முதன்மையானவராக வெளிப்பட்டார். கரிம உமிழ்வைக் குறைப்பதற்கான எந்த ஒரு முயற்சியையும் 'உலகளாவிய' சதியாக முத்திரை குத்தினார். மேலும், பாரிஸ் உடன்பாட்டில் இருந்தும் விலகிக்கொண்டார். அமெரிக்காவில் (எல்லா இடங்களிலும் இருப்பது போலவே) உள்ள சில சமூகங்கள், பாரம்பரியமாக நிலக்கரித் தோண்டுவதை முதன்மை பொருளாதார உயிர்நாடியாக கொண்டுள்ளன என்பது உண்மைதான். மேலும், பசுமை ஆற்றலுக்கு மாறுவதால் அவர்கள் அளவுக்கதிகமாக பாதிக்கப் படுவார்கள் என்பதும் உண்மைதான். ஆக, புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு முடிந்தவரை சிக்கலின்றி மாறிச் செல்வதை உறுதி செய்ய வேண்டியது, சம்பந்தப்பட்ட அரசாங்கங்களின் பொறுப்பாகும். உலகம் முழுவதுமுள்ள பழமைவாத மற்றும் தீவிர வலதுசாரிக் குழுக்கள், கரிம உமிழ்வைக் குறைப்பதற்கு எதிராக, அதிகரித்த அளவில் குரல் கொடுக்கிறார்கள். இதனால், பருவநிலை மாற்றம் மீதான எந்த ஒரு உலகளாவிய புரிந்துணர்வும் அதிகரித்த அளவிற்கு, பாகுபாடான அரசியல் அழுத்தங் களைச் சார்ந்துள்ளது. மேலும், திடீர் மற்றும் எதிர்பாராத திருப்பங்களுக்கும் உள்ளாகிறது. அக்டோபர் 2021 ல் கசிந்து வெளிவந்த சில ஆவணங்கள், செல்வச் செழிப்பு மிக்க நாடுகளான ஆஸ்திரேலியா, ஜப்பான், சவுதி அரேபியா போன்ற நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் செல்வாக்கு செலுத்தி புதை படிம எரிபொருள் பயன்பாட்டிலிருந்து அவசரமாக மாறி செல்வதற்கான தேவையை குறைத்துக் காட்டும்படி கேட்டுக்கொண்டதாக சொல்கின்றன.

### இந்தியாவின் இராஜதந்திரத் தோல்வி

பருவநிலை மாற்றம் என்ற வடிவத்தில், பிழைத்திருக்கும் பேராபத்தை இந்தியா எதிர்கொள்கிறது. புயல்கள், மேக வெடிப்பு பெருமழை, நிலச்சரிவுகள், கடும்வறட்சி, போன்ற வடிவங்களில் நிகழும், அதிதீவிர பருவநிலை நிகழ்வுகள் என்றழைக்கப்படுபவற்றின் மூலம் நாம் ஏற்கனவே பாதிக்கப்படுகிறோம். என்றாலும்கூட, இந்திய அரசாங்கம் (சீனாவுடன் சேர்ந்து கொண்டு) கடைசி நேரத்தில் இடையூறு செய்து, நிலக்கரி மின்னுற்பத்தி மற்றும் புதை படிம எரிமங்களுக்கான மானியங்களை முடிவுக்குக் கொண்டுவரும் தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்தது. 'தன் தலையில் தானே மண் அள்ளி போட்டுக்கொண்ட' செயலாகவே இதனை விளக்க முடியும். இது, வளரும் நாடுகளில் $10லட்சம் கோடி நிதி முதலீடு செய்ய, உலகின் வடபகுதியிலுள்ள பணம்படைத்த நாடுகளை உறுதியளிக்கச் செய்வதில் ஏற்பட்ட தோல்வியின் விளைவாகும்.

2014 இல், நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பிறகு, அவர் மேற்கொண்ட எண்ணற்ற அந்நிய நாட்டு பயணங்களால், உலக அரங்கில் இந்தியாவின் பெயர் மேம்பட்டுள்ளது என மோடியின் அரசாங்கம் அடிக்கடிப் பீற்றிக் கொள்கிறது. என்றாலும்கூட, உண்மை ஒரு மாறுபட்டத் தோற்றத்தைக் காண்பிக்கிறது. இந்தியாவின் நலன்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன. மாறாக, ஒரு அவசியமான ஒப்பந்தத்தைத் தகர்த்ததற்காக, உலக அரங்கில் நாம் எதிரியாக்கப்பட்டு விட்டோம். அப்போதிருந்து, இந்திய அரசாங்கம் தன்னைப்பற்றிய எதிர்மறை ஊடக செய்தி வெளியீட்டை எதிர்க்கிறது. நிலக்கரியைப் 'படிப்படியாக நிறுத்தும்' என்னும் பரிந்துரைக்கு மாறாக, நிலக்கரியைப் 'படிப்படியாக குறைக்கும்' என்று வலியுறுத்தப்படும் குறிப்பிட்ட நிலையானது, அமெரிக்க-சீன அறிக்கையில் இருந்தே எடுக்கப்பட்டது என்றது.

ஆனாலும், தான் ஏற்றுக்கொள்ளாத அறிக்கை ஒன்றை சர்வதேச அரங்கில் வாசித்த தாக சொல்லப்படும், இந்திய அதிகாரிகளின் அப்பாவித்தனம் பற்றி ஒருவர் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். பருவநிலை மாற்றத்தை தடுப்பது இந்தியாவின் நலன்களுக்கு உகந்ததாகும். அதே நேரத்தில், மோடியின் நெருங்கிய ஆதரவாளர்களில் ஒருவரான அதானி குழுமத்தினர், ஆஸ்திரேலி யாவின் நிலக்கரிச் சுரங்கத் தொழிலில் பெருமளவு முதலீடு செய்துள்ளனர் என்பதையும் கட்டாயமாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

### மனித இனத்திற்கான கடைசி நம்பிக்கை

ஸ்வீடனைச் சார்ந்த சூழலியல் செயல்

பாட்டாளரான கிரேட்டா தும்பெர்க், ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது, "சிஓபி 26–ன் தோல்வியொன்றும் இரகசியமல்ல. நாம் முதலில் எந்த வழிமுறையால் நெருக்கடிக்குள் தள்ளப் பட்டோமோ, அதே வழிமுறையில் நம்மால் அதனைத் தீர்க்க இயலாது என்பது தெளிவாகத் தெரிகிறது" என்றார். கரிம உமிழ்வைப் பெருமளவு குறைப்பது என்பதை சாத்தியமாக்க முடியவில்லை என்றால், பருவநிலை மாற்ற நெருக்கடியைத் தீர்ப்பதற்கான எந்த ஒரு முயற்சியும் மாயையே ஆகும். ஆனாலும் கூட, உலகத் தலைவர்கள் 'வழக்கம் போல் செயல்படுவது' என்ற அணுகு முறை யையே பின்பற்றுகிறார்கள். இது மிகத் தெளிவாகவே போதுமானதல்ல.

இந்த உச்சி மாநாட்டின் இறுதியில் எட்டப்பட்ட புதிய உடன்பாடு, கிளாஸ்கோ பருவநிலை ஒப்பந்தம் ஆகும். இதன்படி, பாரிஸ் ஒப்பந்த இலக்கான, வெப்பநிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியஸ்ஸில் நிறுத்த கரிம உமிழ்வைக் குறைப்பதற்கான திட்டங்களை 2022 இல் மீள்பார்வை செய்வதென ஏற்றுக் கொள்ளப் பட்டது. நிலக்கரி உபயோகத்தைப் 'படிப்படியாக குறைப்பது' மற்றும் வளரும் நாடுகளுக்கு பருவநிலை நிதியுதவி வழங்குவது ஆகியவற் றிலும் கவனம் குவித்தது. சிலி, போலந்து, இந்தோனேசியா, வியட்நாம், தென்னாப்பிரிக்கா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் 2030 திலிருந்து 2040 க்குள் நிலக்கரியைப் படிப்படியாக நிறுத்துவது என்ற உறுதிமொழியை அளித்துள் ளார்கள். அதேநேரத்தில், உலகிலேயே மிகப் பெரிய பொருளாதார நாடுகள் அதாவது இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகியன, அதைப் போன்ற எந்த ஒரு உறுதிமொழியையும் அளிக்கத் தவறிவிட்டனர். இந்தியா 2070ஐ, நிகரபூஜ்ய கரிம உமிழ்வுக்கான இலக்காக நிர்ணயித்துள்ளது. இது, 2060 ஐ, நிகரபூஜ்ய கரிம உமிழ்வுக்கான இலக்காக நிர்ணயித்துள்ள சீனாவை விட மேலும் பின்தள்ளியுள்ளது. இந்தியா, சீனா மற்றும் வேறுபல நாடுகளும் மீத்தேன் உமிழ்வைக் கட்டுக்குள் வைப்பதற்கான உறுதியை அளிக்கத் தவறிவிட்டன.

இந்தியா உள்ளிட்ட 45 நாடுகள், நீடித்த இயற்கை முறையிலான விவசாயத்திற்கு மாறிச்செல்ல, $400 கோடி நிதியை முதலீடு செய்வதாக உறுதிபூண்டுள்ளனர். மிகவும் அற்ப சொற்ப பிரச்சினைகளில் கூட, விவசாயிகளுடன் இணைந்து செயலாற்ற நரேந்திர மோடி தயங்கும் போது, உறுதி பூண்டதற்கேற்ப விளைவுகளை கொண்டு வரும் இந்திய அரசாங்கத்தின் திறன் பற்றி ஒருவர் சந்தேகம் கொள்ள மட்டுமே முடியும். பொதுப் போக்குவரத்து மற்றும் மிதி சைக்கிள் வண்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு மாற்றாக, மின்னூர்திகளை இயற்கைச் சார்ந்த போக்குவரத்துக்கான வழிமுறையாக, இந்த மாநாடு கவனத்தில் கொண்டதும் விமர்சனத்திற்குள்ளானது.

உலகம் முழுவதுமுள்ள இளைஞர்கள் மட்டுமே மனித இனத்திற்கான கடைசி மற்றும் சிறந்த நம்பிக்கை எனத் தெளிவாகத் தெரிகிறது. நமது கிரகத்தில் மனித இனம் தொடர்ந்து உயிர் வாழ்வதற்காக, கெட்டி தட்டிப்போன பெரு நிறுவன நலன்களுக்கு எதிராகப் போராட, அவர்கள் அணிதிரண்டார்கள். இலாப நோக்கத் திற்கு மேலாக, மனித இனத்தின் கூட்டு நலனை முன்வைக்கும் நோக்கத்துடன், ஒருங்கிணைப் பிற்கான கூட்டணிகளை கட்டி எழுப்ப வேண்டும். அவை உள்ளூர் மட்டங்களில் இருந்தும், தேசிய, மாநில மற்றும் உள்ளாட்சி மட்டங்களிலும், ஒவ்வொரு தெருக்களிலும், ஆலைகளிலும் வேர்கால் மட்ட போராட்டங் களில் ஒன்றிணைய வேண்டும்.

'லிபரேஷன்' டிசம்பர் 2021

**தமிழாக்கம் – செந்தில்**


மாலெ தீப்பொறி

மாதம் இருமுறை

**சந்தா சேர்ப்பு இயக்கம்**

**தனி இதழ் ரூ.10 – ஆண்டுச் சந்தா ரூ.150**

இப்போதே சந்தாதாரர் ஆகிடுவீர்!

**2021 அக்டோபர் 1 முதல்**
**டிசம்பர் 15 வரை**

– 2ம் பக்கத் தொடர்ச்சி...

*அப்போதைய அதிமுக அரசும் இசுலாமியர் சிறைவாசிகளை விடுதலை செய்யவில்லை. கடந்த ஆட்சியாளர்கள் பாஜக பினாமி ஆட்சியாளர்களாக இருந்ததால் இசுலாமியர் சிறைவாசிகள் விடுதலையை புறக்கணித்து விட்டனர். தற்போதுள்ள திமுக அரசாங்கத்துக்கு ஏன் தயக்கம்? பாஜக இதை அரசியலாக்கக் கூடும் என்று திமுக அரசு அஞ்சுகிறதோ என்ற கேள்வி எழுகிறது. இதே அணுகுமுறைதான் எழுவர் விடுதலையிலும் வெளிப்படுகிறது. இத்தகைய அரசியல் அணுகுமுறை இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு எதிரானது.*

**தொழில்நுட்ப சாக்குபோக்குகளையும் தவிர்க்க வேண்டும்!**

*சமீபத்திய ராஜ்குமார் வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பு மிகத் தெளிவாக உள்ளது. "இத்தகைய விவகாரங்களில் ஆளுநர் ஒப்புதலுக்காக காத்திருக்க வேண்டியதில்லை. மாநில அரசே முடிவு செய்து விடுதலை செய்யலாம். " என அறிவித்துள்ளது. எனவே, இஸ்லாமியர் சிறைவாசிகள் விசயத்தில் திமுக அரசுக்கு அரசியல் உறுதி வேண்டும்.*

*அனைத்து ஆயுள் சிறைவாசிகளும் திருந்தி வாழ்வதற்கான வாய்ப்புகள் வழங்குவதற்கு ஏற்ப, அரசாணை 488 உடனே திருத்தப்பட வேண்டும்.*

*இஸ்லாமியர் ஆயுள் சிறைவாசிகள் விசயத்தில், முன்கூட்டிய விடுதலை என்ற கேள்வியும் கூட எழவில்லை. இவர்கள், சராசரியாக 23 முதல் 26 ஆண்டுகள் வரை சிறைக்குள் இருந்து வருகிறார்கள். எனவே, இந்திய குற்றவியல் நடைமுறை சட்டப்படியே கூட, இவர்கள் 14 ஆண்டுகள் கழித்து விடுதலை செய்யப்பட்டிருக்க முடியும்.*

*எனவே மேற்கூறிய அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு திமுக அரசாங்கமானது, உடனடியாக அரசாணை 488யை திருத்தியமைக்க வேண்டும். 20 ஆண்டுகளை சிறையில் கழித்தவர்கள், விளிம்புநிலைப் பிரிவினர், பெண்கள், இஸ்லாமியர் உள்ளிட்ட சிறுபான்மை பிரிவினர்களை விடுவிக்கும் வகையில் அரசாணை திருத்தப்பட வேண்டும். இதன்மூலம் 38 இஸ்லாமிய சிறைவாசிகள், 32 ஆண்டுகளாக சிறையில் வாடும் வீரப்பன் சகோதரர்கள் மூவர், ராஜிவ் கொலை வழக்கில் தண்டனை பெற்று 30 ஆண்டுகளை சிறையில் கழித்துள்ள எழுவர் ஆகியோரும் விடுதலை பெறும் நீதியை ஆட்சியிலுள்ள திமுக ஆட்சி வழங்கிட வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) வலியுறுத்துகிறது.*

**இகக(மாலெ) விடுதலை**

**தமிழ்நாடு மாநிலக் குழு**

**தேசிய ஊரக வேலை உத்தவாத திட்டத் தொழிலாளர்கள் மத்தியில் அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்க உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் நடைபெறுகிறது.**



**கள்ளக்குரிச்சி**



**வாடிப்பட்டி**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 4.12.2021 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

## மாணவிகள் மீதான பாலியல் வன்முறைக்கு எதிராக




## நூறு நாள் வேலையில் பாகுபாடு காட்டுவதைக் கண்டித்து




## விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவாக




Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh